# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்
ஆசிரியர்: ஆ.செல்வம்

ஜூலை - 2020 | இணைய இதழ் | தனிப்பிரதி 10.00





பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குமாநகராட்சியுடன் இணைந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ச ர்ரில் ஆர்சனிக் ஆல்பம் 30 என்ற நோய் எதிர்ப்பு சக்தி மருந்தினை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ் இ.ஆ.ப., அவர்கள் 17.07.2020 அன்று வழங்கினார்.
இந்நிகழ்ச்சியில் அரசு உயர் அதிகாரிகள், மருத்துவர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.அன்பரசு வடசென்னை மாவட்ட நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியரிடம் முறையீடு



மதுரையில் மஹா கபசுர குடிநீர் பாத்திரை மற்றும் சூப் வழங்கும் நிகழ்வில் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் பங்கேற்பு



மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சருடன் சங்க மாநில பொதுச் செயலாளர் சந்திப்பு



சென்னை மாவட்ட ஆட்சியரிடம் பெருந்திரள் முறையீடு



தருமபுரி மாவட்ட ஆட்சியரிடம் முறையீடு



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரிடம் முறையீடு



தென் சென்னை மாவட்டம் சார்பில் நடைபெற்ற மருத்துவ முகாம் மற்றும் நிவாரணம் வழங்கல்

# 14.07.2020 மாவட்டங்களில் நடைபெற்ற பெருந்திரள் முறையீடு இயக்கம்



கிருஷ்ணகிரி



நாகப்பட்டினம்



பெரம்பலூர்



நீலகிரி



ராணிப்பேட்டை



சேலம்



திருவண்ணாமலை




தென்காசி

# அரசு ஊழியர்

ஜூலை 2020

மலர் : 41 இதழ் : 7

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*


*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

### நீங்களும், நாங்களும்!

மாடிவீடு உங்களுக்கு - சிறு
மட்டக்குடிசை எங்களுக்கு;
காடு தோட்டம் உங்களுக்கு - கொஞ்சம்
மேடும் தரிசும் எங்களுக்கு;
பாலும் பழமும் உங்களுக்கு - நஞ்ச
பழைய சோறு எங்களுக்கு;
பட்டும் பணமும் உங்களுக்கு - தினம்
பழைய கந்தல் எங்களுக்கு;
உடமையெல்லாம் உங்களுக்கு - வெறும்
உழைப்பு மட்டும் எங்களுக்கு;
உலகமெல்லாம் உங்களுக்கு - இங்கு
ஒன்னுமில்லே எங்களுக்கு!

- வெ.நா.திருமூர்த்தி



தலைவர் மடல்

## கடமை செய்வோம் கலங்காமல்! உரிமை கேட்போம் தயங்காமல்!

கடமையைத் தொடரும் உணர்வு நம் அனைவரிடமும் உள்ளது. உண்மையாக உழைப்பதுதான் நம் அனைவரின் கடமை. அந்தக் கடமை என்னை அழைப்பதை உணர்கிறேன் என்று ஆப்ரஹாம் லிங்கன் என்றோ சொன்ன வார்த்தைகள் இன்றைய சூழ்நிலையிலும் அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் நிதர்சனமாக உள்ளது. உலகையே துவம்சம் செய்திருக்கும் கொடிய வைரஸ் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் பணியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஈடுபட்டு வரும் அரசு ஊழியர்களின் பணிகளை பொதுமக்கள் இப்போது சேவையாகப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். 'ஏதோ கடமைக்கு வேலை செய்கிறார்' என்று அரசு ஊழியர்களை பார்த்துப் பேசியவர்கள் கூட இப்போது, 'அவர் கடமையோடு வேலை செய்கிறார்' என்று கூற வைத்திருக்கிறது கொரோனா. எந்தப் பேரிடர் காலமாக இருந்தாலும் அந்தப் பேரிடரில் மக்களை காக்கும் பணியில் இருப்பவர்கள் அரசு ஊழியர்கள் என்பதை அனைவரும் அறிவர். தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள் என்று எதுவும் செயல்பட முன்வராத இக்கட்டான காலங்களில் தங்கள் உயிரை பணயம் வைத்து மக்களைக் காக்க போராடி வரும் அரசு ஊழியர்களின் பணி மகத்தானது என்று பலரும் பேசத் துவங்கியிருக்கிறார்கள்.

அரசு ஊழியர்கள் என்பதாலேயே கடமை ஆற்ற வேண்டியது கட்டாயம் என்றெல்லாம் எதுவும் இல்லை. இது அதற்கும் மேலே. அரசு ஊழியர்கள் மக்களோடு ஒன்றிவிட்டவர்கள். நம்மால் மட்டுமே மக்களின் நாடித்துடிப்பை உணர முடியும், அவர்களுக்கு உதவ முடியும் என்பது அரசுக்கும் தெரியும். அரசாங்கம், கொரோனா தொற்று தடுப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அரசு ஊழியர்களுக்கு போதுமான பாதுகாப்பு கவசங்கள் வழங்கிடாத போதும் நாம் தொடர்ந்து கொரோனாவிலிருந்து மக்களைக் காக்கும் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளோம். இதனால் நம்மில் பலருக்கும், நமது குடும்பத்தினர்களுக்கும் இந்த தொற்று ஏற்பட்டுள்ளது. அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஊழியர்கள் என நம்மில் சிலபேர் கொரோனா தடுப்புப் பணியில் ஈடுபட்டபோது ஏற்பட்ட தொற்றால் இறந்து போயிருக்கிறார்கள். சம்பளம் பெறுவதால் இந்தக் கடமைகளை கட்டாயம் நாம் செய்தாக வேண்டும் என்று யாராவது சொல்வார்களேயானால்

அவர்கள் அரசு ஊழியத்தின் அர்த்தத்தை அறியாதவர்களாவே இருப்பர். மற்ற காலங்களில் அலுவலகத்தில் உட்கார்ந்து நாம் பார்ப்பது வேலை. பேரிடர் காலங்களில் நாம் மக்களுக்குச் செய்வது சேவை. இது கடமை வெளிப்படும் காலம் அதுதான் நம்மை வழிநடத்தி வருகிறது.

அரசு மருத்துவர்கள் போராடிய போது மருத்துவத்துறையையே தனியார் மயாக்க வேண்டும் என்றார்கள். அரசு உழியர்கள் போராடிய போது சிலபேர் அரசுத் துறைகளை தனியார் மயாக்க வேண்டும் என்றார்கள். அரசுத் துறைகள் பெரும்பாலானவற்றை தனியார் மயமாக்கிவிட்டால் என்ன நடக்கும் என்பதற்கு இப்போது தனியார் வசமுள்ள மருத்துவ மனைகளும், விமான சேவைகளும் இதர தனியார் துறைகளும் இந்தப் பேரிடர்காலத்தில் என்ன செய்தன என்பதைப் பார்த்தாலே புரிந்துவிடும். எனவே அரசு மயம் என்ற பொதுமக்களுடன் பின்னிப் பிணைந்த இயற்கையான ஒரு பிணைப்பை லாபநோக்கத்திற்காக வெட்டி வீழ்த்தப் பார்ப்பது சொந்த வீட்டுக்குள்ளேயே குண்டு வைப்பது போன்றதாகும். பொதுமக்களும் நடுநிலையாளர்களும் இதை எதிர்க்க வேண்டும். அரசாங்கம் என்பது லாபத்திற்காக நடத்தப்படும் நிறுவனம் அல்ல. அப்படி மாறினால் அமெரிக்கா விலும், இத்தாலியிலும் நடந்ததுதான் இங்கும் நடக்கும்.

''நீங்கள் பயப்பட வேண்டும் என்று இடைநிறுத்தப்படும் போதெல்லாம் நீங்கள் வலிமை தன்னம்பிக்கை மற்றும் அனுபவத்தைப் பெறுகிறீர்கள்... உங்களால் முடியாது என்று நினைக்கும் விஷயத்தை நீங்கள் கட்டாயம் செய்ய வேண்டும்'' என்கிறார் எலினார் ரூஸ்வெல்ட் என்கிற அறிஞர். அரசு ஊழியர்கள் உரிமைக்காக போராடும் போது அதை பொதுமக்கள் உள்ளிட்ட பலபேர் எதிர்த்து விமர்சனம் செய்கிறார்கள். நாடே பஞ்சத்தில் இருக்கும்போது அரசு ஊழியர்கள் ஊதிய உயர்வு கேட்கிறார்கள் என்று சில அமைச்சர்கள் கூறும் பொய்ப்பிரச்சாரங்கள் மக்களிடம் எடுபட்டுவிடுகிறது. அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள் போன்றவர்கள் தங்களுடைய நியாயமான உரிமைகளுக்காக போராடியபோது இவர்கள் அரசுத்துறையில் இருப்பதால் போராட்டம் நடத்துகிறார்கள், பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்துகிறார்கள், பிள்ளைகளின் கல்வியை கேள்விக்குறியதாக்கு கிறார்கள் அதனால் அனைத்தையும் தனியார் மயமாக்க வேண்டும் என்று பொதுமக்கள் சிலரிட மிருந்து கடந்த கால போராட்டங்களின் போது விமர்சனங்கள் வந்தன. பொதுமக்களின் உறவினர்கள் பலபேர் அரசு ஊழியர்களாக இருந்த நிலையிலும் உண்மை நிலையை அறிய முற்படாமல் உறவினர் களே கூட வேலை நிறுத்தத்தை எதிர்த்தார்கள். சம்பளத்தை குறைக்க வேண்டும் என்றார்கள். அனைத்துத் துறைகளையும் தனியாரிடம் ஒப்படைத் தால்தான் நாடு உருப்படும் என்றார்கள். அவர்கள் அனைவரின் கேள்விகளுக்கும் இன்று கொரோனா என்ற கண்ணுக்குத் தெரியாத வைரஸ் பதில் சொல்லியுள்ளது. இன்று பொதுமக்களின் வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நூறு நாட்களுக்கு மேல் பேருந்துகள் இயங்கவில்லை, கல்விக்கூடங்கள் திறக்கப்படவில்லை, வேலை வாய்ப்புகள் இல்லை, இருந்த வேலைகளும் பறிக்கபடும் அபாயம் வேறு ஏற்பட்டுள்ளது. யாரும் போராடாமலேயே ஒரு பெரிய பொருளாதார சிக்கலுக்குள் நாடு புதைந்து கொண்டுள்ளது.

ஒரு நாட்டின் இயக்கமே நின்று போயிருந்த நிலையிலும் பொருளாதாரத்தில் நலிவடைந்த தூய்மைப் பணியாளரின் சேவை நிற்கவில்லை. நோயாளிகளை பராமரிக்கும் செவிலியர்கள் கொரோனாவுக்கு பயந்து ஓடிவிடவில்லை. அரசு மருத்துவர்களும் தங்களுக்கு தொற்று ஏற்படுவதை தவிர்க்க முடியாது என்பதை அறிந்திருந்தும் மக்களைக் காக்கும் அரும்பணியில் தங்கள் பணிகளை தொடர்கின்றனர். பொது சுகாதாரத் துறை ஊழியர்களும், மற்ற துறை ஊழியர்களும் கொரோனா தொற்றுத் தடுப்பு சம்பந்தப் பட்ட பணிகளில் தங்கள் ஈடுபடுத்திக் கொண்டு அரசாங்கத்திற்கு உறுதுணை யாக இருந்து வருகின்றனர். பலதுறைகளைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் இப்படியொரு இக்கட்டான உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் பணியாற்றி வரும் சூழலில்தான் இந்த அரசாங்கம் ஜனவரி 2020 முதல் ஜூலை 2021 வரையிலான காலத்திற்கு அகவிலைப்படியை நிறுத்தி வைப்பதாக அரசாணை வெளியிடுகிறது. சரண்டரை நிறுத்திவைப்பதாக ஜி.ஓ. வருகிறது. ஜிபிஎப் வட்டி விகிதம் குறைக்கப்படுவதாக செய்தி வெளியிடுகிறது. ஏற்கெனவே போராட்டங் களில் ஈடுபட்டு வேலை நிறுத்தம் செய்த அரசு ஊழியர்களின் மீதான துறை நடவடிக்கைகளை கைவிட மறுக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளாக அரசு ஊழியர்களின் உரிமைகள் மீது அரசாங்கங்கள் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. அது இந்தப் பேரிடர் காலத்திலும் அரசு ஊழியர்கள் தங்கள் இன்னுயிரைப் பற்றி கவலைப்படாமல் மக்கள் சேவை செய்து கொண்டிருக்கும் நிலையிலும் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்வது அரசு ஊழியர்களிடையே சோர்வை உண்டாக்கியுள்ளது. அரசாங்கம் செய்யும் தவறுகளுக்காக மக்களை தண்டித்துவிடக்கூடாது என்கிற நோக்கில் அரசு ஊழியர்களாகிய நாம் ஒரு

பக்கம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை தொடர்ந்து கொண்டும் மறுபுறம் நமக்கான உரிமைகளை இழந்துவிடாமலும், பறிக்கப்பட்ட உரிமைகளை திரும்பப் பெறவும் போராட வேண்டியுள்ளது. நாம் நம் கடமையைச் தொடரும் அதே நேரத்தில் உரிமை கேட்பதையும் தொடர வேண்டியுள்ளது. கடமை செய்வதும் உரிமை கேட்பதும் இப்போது காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

செயல்பாட்டின் விளைவல்ல செயல்பாடுதான் முக்கியமானது. நாம் நல்ல செயலைச் செய்ய வேண்டும். அது நம் சக்திக்கு அப்பாற்பட்டதாகக் கூட இருக்கலாம். ஆனால் அவற்றின் மூலம் இந்த சமுதாயத்தில் நம்பிக்கையை விதைக்க வேண்டும். நம்முடைய செயல்களால் பயன்கள் வியைாமல்கூட போகலாம். அதற்காக நாம் நற்செயலை செய்யாது நிறுத்த வேண்டும் என்பதில்லை. நம் செயல்பாட்டின் விளைவாய் என்ன வரும் என்று நாம் அறியாது இருக்கலாம். அதை நம் சந்ததிக்கு விட்டுச் செல்வோம். ஆனால் நாம் எதுவுமே செய்யவில்ல என்றால் எந்த விளைவும் இருக்காது.

இன்றிலிருந்து இருபது வருடங்கள் கழித்து நாம் வசதியாக இருக்கிறோமா? விலையுயர்ந்த காரை வைத்திருக்கிறோமா? பெரிய வீட்டில் வசிக்கிறோமா? நம் வங்கிக் கணக்கில் லட்சக்கணக்கில் பணம் வைத்திருக்கிறோமா? என்பதெல்லாம் பெரிய விஷயமாக இருக்காது. ஆனால் நம் குழந்தைளின் வாழ்வில் அவர்கள் தங்களுக்கான உரிமைகளை சுகிப்பதற்கு முக்கிய காராணமாக இருந்திருக் கிறோமா? என்பது தான் முக்கியமானதாக இருக்கும். அதனால் நம் கடமை உணர்வோடு உரிமை உணர்வையும் வளர்த்தெடுப்போம். இழந்த உரிமைகளை மீட்டெடுப்போம்! ❖



# கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை காப்போம்!
# அதிகார வர்க்கத்தின் ஊழியர் விரோத போக்கிற்கு எதிராக வலுவான இயக்கம் காண்போம்!

உலகம் முழுவதும் கொரோனா வைரசால் சர்வதேச அளவில் பாதிக்கப்பட்டோரின் (ஜூலை 5 வரை) எண்ணிக்கை 14,25,240 உயிரிழப்பு 5,34,491. அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் 1வது அமெரிக்கா, 2வது பிரேசில், 3வது இந்தியா வந்துள்ளது. இந்தியாவில் 6,90,396 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். 19,390 பேர் உயிரிழந்துள்ளனர்.

தேசிய அளவில் மகாராஷ்டிரா முதலிடம், 2வது இடம் தமிழ்நாடு, தலைநகர் டெல்லி 3வது இடத்தில் உள்ளது.

கொரோனா குறித்து சமூக ஆர்வலர்கள் கூறும் கருத்துக்களும், பத்திரிகையில் வெளிவந்திருக்கும் செய்திகளும் கொரோனாவை எதிர்கொள்ள அரசும், சமூகமும் தயாராவதற்கான அவகாசத்தை எடுத்துக் கொள்வதற்கான உத்தியாக அறிமுகமான ஊரடங்கு தமிழ்நாட்டை பொறுத்தவரை பெரும் பள்ளத்தில் தள்ளும் சரிவாக உருவெடுத்திருக்கும் சூழலில் அரசு அதை முடிவுக்கு கொண்டுவருவதே சரியானதாக இருக்கும். இந்த விஷயத்தில் மிகவும் குழப்பமான மன நிலையில் தமிழக அரசு இருப்பதை அதன் சமீபத்திய அறிவிப்புகள் வெளிப்படுத்துகின்றன. ஜூன் மாதத்தோடு ஊரடங்கு முடிவுக்கு வரலாம் என்று மக்கள் பரவலாக எதிர்பார்த்திருந்த நிலையில், தமிழகம் முழுவதும் ஊரடங்கு நீட்டிக்கப்படலாம் என்பதற்கான சமிக்ஞைகளை அரசு இயந்திரம் வெளிப்படுத்தத் தொடங்கியது. பின்னர் இந்தப் பக்கமும் செல்லாமல் அந்தப் பக்கமும் செல்லாமல் இருக்கும் சூழலையே சில மாற்றங்களுடன் நீடிப்பதன் அறிவிப்பாக அது வெளியானது. இந்தச் சமயத்தில் மக்கள் சார்பில் அரசுக்கு சொல்ல விரும்புவது ஒன்றுதான். மேலும் சுகாதாரத்தை வலுப்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி துணிந்து முடிவெடுங்கள், மக்களைத் திறந்து விடுங்கள்.

ஊரடங்கு கொரோனாவை எதிர்கொள்வதற்கான தீர்வு அல்ல என்பதை உலக நாடுகள் பலவும் உணர்ந்து இயல்பு வாழ்க்கைக்கு வேகமாக திரும்புகின்றன. அதிகபட்சம் சில மாதங்கள் நீடிக்கலாம் என்று கொரோனாவை கணக்கிட்ட



காலம் போய் இன்று குறைந்தபட்சம் இந்த வருடத்துக்குள் அதிலிருந்து மீள எந்த வழியும் இல்லை என்கிற காலகட்டத்தை நாம் வந்தடைந் திருக்கிறோம். அப்படி என்றால் கொரோனாவை எதிர்கொள்வதற்குப் பொருளாதார வலுவை நாம் அதிகரித்துக் கொள்ள வேண்டும். நேரெதிராக ஊரடங்கின் பெயரால் பொருளாதாரத்தை சேதமாக்கி னால் சமூகம் கடுமையான விலை அதற்கு தர நேரிடும் என்பதே ஊரடங்கிலிருந்து மீள எல்லா சமூகங்களும் காட்டி வரும் உத்வேகத்திற்கான காரணம். இந்தியாவிலேயே கூட தொழில் மைய மாநிலங்கள் அத்தகு முடிவை எடுத்திருக்கின்றன.

தமிழ்நாடு அரசு கொஞ்சம் தடுமாறுகிறது. மாநிலத் தலைநகரமும் பொருளாதாரத்தின் இதயமுமான சென்னையை அது தொடர்ந்து முடக்கி வைத்திருக் கும் நடவடிக்கையானது பெருத்த மாற்றங்களை உண்டாக்கும். டெல்லி, மும்பை, கொல்கத்தா மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் சென்னையின் மக்கள்தொகை பாதி அல்லது அதற்கும் குறைவு. ஆனால் கொரோனாவின் பாதிப்புகள் அதிகம். பெரும் நெரிசல் கொண்ட மும்பை தொடக்கத்தில் சென்னையை காட்டிலும் தீவிரமான பாதிப்புக்கு ஆளாகி இருந்தது. ஆனால் வேகமாக பாதிப்பிலிருந்து வெளியே வருகிறது. உலகிலேயே மக்கள்

மேசையிலிருந்து...

அடர்த்தி அதிகமான தாராவி பகுதியை அது கையாளும் விதம் இன்று முன்னுதாரணமாக பேசப்படுகிறது. அதேபோல் (இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக கொரோனாவை கையாண்ட மாநிலம் கேரளா) சென்னையை ஒப்பிட மும்பை துடிப்பாக இயங்குகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கொரோனாவின் தொடர்ச்சியாக ஊரடங்கையும் தொடரும்போது நோய்க்கு ஆளானவர்கள் போக நோய்க்கு ஆளாகாதவர்களும் செயலற்று வீட்டுக்குள் முடங்கி பெரும் மன உளைச்சலை சந்திக்கின்றனர். அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரம் முற்றிலும் நிலைகுலைந்திருக்கிறது. (குறிப்பாக இந்த காலத்தில் 15 கோடி மக்கள் வாழ்வாதாரம் இழந்திருக்கிறார்கள்) தமிழக அரசு கொரோனா தொடர்பாக ஆலோசனை வழங்க நியமித்த மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவும் கூட ஊரடங்கைத் தொடர வேண்டும் என வலியுறுத்தவில்லை.

மருத்துவ நடவடிக்கைகள் அப்படியே தொடர வேண்டும், பரிசோதனையை அதிகரித்து இறப்பை குறைக்க வேண்டும். ஊரடங்கை நீட்டிக்க பரிந் துரைக்கவில்லை என்று தெளிவாகவே கூறிவிட்டது. (உ-தா. சென்னை மாநகராட்சியில் 39,539 தெருக்கள் உள்ளன. இதில் 9509 தெருக்களில் வைரஸ் தொற்று இருந்தது. இதில் 1100 தெருக்களில் கடுமையான தொற்று தடுக்கப்பட்டுள்ளது) சென்னை பிராந்தியத்தை முடக்கியதோடு அல்லாமல் ஏனைய பகுதிகளிலும் பொது போக்குவரத்து முடங்கியது. ஞாயிற்றுக் கிழமைகளில் எந்த செயல்பாடும் இல்லாமல் ஆக்குவது என்று அடுத்தடுத்து அது முன்னெடுக்கும் நடவடிக்கைகளை எந்த வகையிலும் தர்க்கரீதியாக நியாயப்படுத்த கூடியவை அல்ல.

பெரும் நோய்த்தொற்று அரசியல் ரீதியாக என்ன விளைவுகளை உண்டாக்கும் என்பதே இன்றைய அரசின் கவலையாக இருப்பதாக தெரிகிறது. ஊரடங்கை நீக்கி தொற்று அதிகமானால் அரசியல் கட்சிகளின் கேள்விகளுக்கு எப்படி பதிலளிப்பது என்பது தான் அரசின் முன்னுள்ள கேள்வி என்றால் அதற்கான ஒரே வழி அனைத்து அரசியல் கட்சிகள், பொருளாதார நிபுணர்கள், மருத்துவ வல்லுநர்கள் ஆகியோருடன் கலந்து பேசி ஊரடங்கை முடிவுக்கு கொண்டு வருவதுதான் சமூகத்தில் விழிப்புணர்வை யும், தொடர் மருத்துவ செயல்பாடுகளையும் அரசு முன்னெடுக்க வேண்டும். போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளோடு தமிழ்நாடு மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பட்டும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வரலாற்றில் முதன்முதலில் காணொலி மூலம் மாநில நிர்வாகிகள் கூட்டமும் (21.6.2020), மாநில செயற்குழு கூட்டமும் (28.6.2020) மிக சிறப்பாக நடைபெற்றது. அதில் 33 மாவட்டங்கள் பங்கேற்று தங்களின் ஆழமான கருத்துக்களை பதிவு செய்த அந்த அடிப்படையில் அதில் இயக்க நடவடிக்கைகளை திட்டமிட்டோம்.

மத்திய, மாநில அரசுகளின் ஊழியர் விரோத, மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிரான அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் முடிவின் அடிப்படையில் தேசிய எதிர்ப்பு தினம் 3.7.2020 இந்தியா முழுவதும் அனைத்து தொழிற் சங்கங்களுடன் இணைந்துகொண்டு நடைபெற்றது. தமிழ்நாட்டில் தொழிற்சங்கம் சார்பாக 6300 இடங்களில் 62 ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தமிழகம் முழுவதும் 300க்கும் மேற்பட்ட இடங்களில் மிக எழுச்சிகரமாக நடைபெற்றது. இனி மத்திய அரசு ஊழியர் விரோத, மக்கள் விரோத நடவடிக்கை பார்ப்போம்

## அடிப்படை ஊதியத்தை நிராகரித்த ஸ்விட்சர்லாந்து பொதுமக்கள்

சுவிட்சர்லாந்து நாட்டில் குடிமக்களுக்கு நிபந்தனையற்ற அடிப்படை ஊதியமாக 2500 பிராங்க் (இந்திய மதிப்பில் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்) வழங்க அந்நாட்டு அரசு முடிவு செய்து அதற்கான ஒப்புதலை பெறுவதற்காக மக்கள் மத்தியில் 2016ஆம் ஆண்டு வாக்கெடுப்பு நடத்தியது.

இந்த வாக்கெடுப்பில் 76.9 சதவீத சுவிஸ் பொதுமக்கள் இத்தகைய திட்டம் வேண்டாம் எனக்கூறி அத்திட்டத்திற்கு எதிராக வாக்களித்து அதனை நிராகரித்துள்ளார்கள். இதற்கு காரணமாக ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒவ்வொரு மாதமும் நிபந்தனையற்ற ஊதியத்தை அரசு வழங்குமானால் அதற்கான நிதியை எங்கிருந்து அரசு பெறும் என்பது குறித்து அரசு தெளிவாக தெரிவிக்காமல் மர்மமாக இத்திட்டத்தை அறிவித்ததால் மக்கள் நிராகரித் துள்ளனர் என்றும், இவ்வாறு நிபந்தனையற்ற ஊதியத்தை அரசு வழங்கினால் அரசின் நிதி



நிலைமை அதலபாதாளத்திற்கு சென்று விடும் என்பதோடு, சுவிட்சர்லாந்து நாட்டில் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படும் என்பதை அந்நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருந்த காரணத்தால் இந்த அடிப்படை ஊதியத்தை அவர்கள் தயக்கமின்றி நிராகரித்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

ஆம், இந்தியாவில் கூட மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு மத்திய, மாநில ஆட்சியாளர்களிடம் இத்தகைய கேள்விகளை எழுப்பி ஆள்வோரின் தவறான நடவடிக்கைகளை நிராகரிக்க வேண்டிய நெருக்கடியான சூழல் தற்போது மென்மேலும் அதிகரித்து வருகிறது. (உ-ம்: இந்தியாவில் அனைத்து மாநில, மத்திய அரசு தொழிற்சங்கங்கள் சார்பாக தேசிய எதிர்ப்பு தினம்)

மத்தியில் பாஜக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த 6 ஆண்டுகளில் ஏராளமான மக்கள் விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் அரங்கேறியுள்ளன, முந்தைய காங்கிரஸ் அரசு கடைபிடித்த பெரும்பான்மை மக்களை பாதிக்கக்கூடிய புதிய பொருளாதார சீர்திருத்தங்களை பாஜக அரசு வேகப்படுத்தி வருகிறது. இந்தியாவை அமெரிக்காவின் இளைய பங்காளியாக மாற்றும் முயற்சியில் மத்திய பாஜக அரசு மிகத் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

## வராக் கடன்கள்

அரசு வங்கி பணம் ரூ. 9,000 கோடியை ஏப்பம் விட்டுவிட்டு லண்டனில் குடியேறி விட்ட சாராய ஆலை அதிபர் விஜய் மல்லையா அவை தற்போது கடனை திருப்பி கட்டுவதாகவும், இந்தியாவில் சிறைச்சாலையில் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார் என்று பத்திரிகை செய்தி. அதேபோல் நீரவ் மோடி 14000 கோடி மோசடி இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

2014ஆம் ஆண்டில் பாஜக கூட்டணி அரசு அமைந்தபோது பொதுத்துறை வங்கிகளின் மொத்த வாராக் கடன் 2,16,000 கோடி ரூபாயாக இருந்தது. அடுத்த நான்கு ஆண்டுகளில் நான்கு மடங்கு அதிகரித்து சுமார் 8,95,000 கோடி ரூபாயாக மாறியது. அதன்பிறகு 2019ல் தள்ளுபடிகளுக்கு பிறகு அந்தத் தொகை ரூ.7,39,000 கோடி என்று மாறியுள்ளது. 2020ஆம் ஆண்டிற்கான மொத்த வாராக் கடன் பற்றிய முழு விபரம் இன்னும் வெளியாக வில்லை. எனினும் கார்ப்பரேட் நிறுவன வராக் கடன்களை வசூலிக்க மத்திய அரசின் அணுகு முறையை பார்க்கும்போது வராக் கடன் தொகை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உயரும் என்று தெரிகிறது. பொதுத்துறை வங்கிகளில் கடன் வாங்கி திருப்பி செலுத்தாத பெரு நிறுவனங்களின் வராக் கடனை பார்த்தோம். இந்த கடனை வசூல் செய்ய பொதுத்துறை வங்கிகள் எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை.

ஆனால் கல்விக்கடன் பெற்ற ஏழை மாணவர்களை கடன் மீட்பு முகவர் என்ற பெயரில் ரிலையன்ஸ் நிறுவனம் மிரட்டி வருகிறது. இந்த ரிலையன்ஸ் நிறுவனம் பொதுத்துறை வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடன் பல லட்சம் கோடி இவர்களின் மிரட்டலால் பல மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர், அதேபோல் பல விவசாயிகளுக் தற்கொலைக்கு ஆளாகி உள்ளதும் கவனிக்கத்தக்கதாகும். இந்தியாவின் வெளிநாட்டு கடன் ரூ. 40 லட்சத்து 88 ஆயிரத்து 750 கோடி. இது கடந்த ஆண்டை விட ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 500 கோடி அதிகம்.

## வங்கிகள் இணைப்பு

ஏற்கனவே நிதி ஆயோக் இந்தியாவில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை ரூ. 56,500 கோடிக்கு விற்பனை செய்ய பரிந்துரை செய்துள்ளது. மத்திய அமைச்சரவை ஸ்டேட் வங்கியின் 5 துணை வங்கிகளை இணைக்க ஒப்புதல் அளித்துள்ளது. ஆட்குறைப்பு, கிளைகள் மூடுதல் போன்ற உள்நோக்கத்துடன் மத்திய அரசு செயல்படுகிறது.

சமீபத்தில் மத்திய அமைச்சரவை கூடி பல முடிவுகள் எடுத்துள்ளது. அவற்றில் ஒன்றுதான் நாடு முழுவதும் உள்ள 1540 நகர கூட்டுறவு வங்கிகளை பாரத ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் கொண்டு செல்வதாகும். இம்முடிவால் 8.6 கோடி வைப்புதாரர்கள் தங்களின் 4.80 லட்சம் கோடி வைப்புகளுக்கு பாதுகாப்பு பெறுவார்கள் என்று மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் கூறியுள்ளார்.

இந்த இணைப்பு கூட்டுறவுகள் கூட்டுறவு அமைப்புகளாக நீட்டிக்க சட்டத் திருத்தம் வகை செய்யவில்லை. இவ்வங்கிகளை தனியார் நிறுவனங்களாக மாற்றிடவும் தனியாருக்கு தாரை வார்க்கவுமே திட்டமிட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

## தொழிலாளர் நல சட்டங்களில் திருத்தம்

மத்திய பாஜக அரசு அந்நிய மூலதனத்திற்கு ரத்தினக் கம்பளம் விரிக்கவும், இந்திய நாட்டு தொழிலாளர்களைத் தங்குத் தடையின்றி சுரண்டவும், தொழிலாளர் நல சட்டங்களை மாற்றுகிறது. 44 தொழிலாளர் நல சட்டங்கள் 4 சட்டங்களாக குறைக்கப்பட்டு தற்போதுள்ள சிறிதளவு சலுகைகளையும் பறிக்கப் பார்க்கிறது. சுமார் 70% தொழிலாளர்களுக்கு தொழில் தகராறு சட்டம்,

ஊதியம் வழங்குதல் சட்டம், பிஎஃப் சட்டம், பணிக்கொடை சட்டம் உள்ளிட்ட 9 அடிப்படை சட்டங்கள் பொருந்தாத வகையில் மாற்றங்களை மேற்கொள்ளவிருக்கிறது. இவையெல்லாம் முழுமையாக அமல்படுத்தினால் தொழிலாளர்களின் நிலை இன்னும் நூறு ஆண்டுகளுக்கு பின்னோக்கி இழுத்துச் செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## சர்வதேச மனித உரிமை பிரகடனம்

1948 டிசம்பர் 10 ஐ.நா. சபை கூடி சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை (Universal Declaration of Human Right) வெளியிட்டது. இதில் அனைத்து நாடுகளும் கையெழுத்துப் போட்டு நம்பிக்கை நட்சத்திரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஐ.நா.வின் அந்த மனித உரிமை சாசனத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய மற்றும் குடும்ப நலனையும், உணவு, உடை, சுகாதாரம், வசிப்பிடம் மற்றும் தேவையான சமூக பாதுகாப்புகளையும் உள்ளடக்கிய தரமான தன்னிறைவான வாழ்க்கைக் கான கனவு உரிமை பெற்றுள்ளான்...



ஒவ்வொரு குடிமகனும் படிப்பதற்கும், வேலை செய்வதற்கும், **சமூகப் பாதுகாப்பை பெறுவதற்கும் உரிமை படைத்தவன் என்கிற வகையில் இவற்றை உத்தரவாதப்படுத்த வேண்டியது ஒவ்வொரு குடி அரசின் கடமையாகும்** என்று மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

ஐநாவின் மனித உரிமை சாசனத்தில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. அவற்றில் சில...

1. வேலை செய்கிற ஒவ்வொருவருக்கும் நியாயமான ஊதியம் பெற உரிமை உண்டு. இவ்வூதியமானது ஒருவர் கண்ணியமாக தனது குடும்பத்தினை வழிநடத்திடப் போதுமானதாக இருக்க வேண்டும். இந்த ஊதியத்தோடு பிறவகை சமூக பாதுகாப்புகளைப் பெறவும் உரிமை உண்டு.

2. சம வேலைக்கு சம ஊதியம் பெறும் உரிமை எவ்வித பாகுபாடுமின்றி ஒவ்வொரு நபருக்கும் உண்டு.

3. தனது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கும், தொழிற்சங்கங்களில் சேர்வதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

மனிதனின் வாழ்வுரிமை என்பது அவர் உயிர் துறக்கும் வரை வேலை செய்து கொண்டே இருப்பதல்ல. குறிப்பிட்ட வயதுக்கு மேல் அவன் வயது முதிர்வில் ஓய்வு பெறுவதற்கும், இளைப்பாறுதலுக்குமான உரிமையும் சேர்ந்தது தான் என்பதையும் ஐ.நா. சபை மனித உரிமை சாசனம் மிகத் தெளிவாக வரையறுத்துள்ளது. ஓய்வுக்கும் இளைப்பாறுவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. வேலை நேரத்திற்கு நியாயமான முறையில் வரம்பிட வேண்டும் என்பதும் ஊதியத்தோடுகூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்பதும் இவ்வுரிமையில் அடங்கும்.

குடும்பத்தினரின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் பேணும் வகையில் உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி, அவசியமான சமூகப்பணிகள் ஆகியவற்றுக்கான உரிமையும், வேலையின்மை, நோய், இயலாமை, விதவை நிலை, முதுமை, வாழ்வதற்கான வசதியின்மை போன்ற நிலைகளில் சமூகப் பாதுகாப்பை பெறுவதற்கும் ஒவ்வொரு வருக்கும் உரிமையுண்டு.

இப்பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை, சுதந்திரங்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட ஒரு குழுவிற்கோ, அரசுக்கோ, தனிநபருக்கோ எவ்வித உரிமையுமில்லை.

ஐக்கிய நாடுகள் சபை மட்டுமல்ல இந்திய அரசியலமைப்பு சட்டமும் மனிதன் வாழ்வுரிமை குறித்து பல்வேறு அம்சங்களை வரையறுத்துள்ளது. அவை

1. மனித வர்த்தகம் கட்டாயப்படுத்திய ஊதியம் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன. இதனை மீறி செயல்பட்டால் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவார்கள்.

அரசு தனது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் எல்லோருக்கும் வேலை வாய்ப்புகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். வேலை இல்லாதவர்களுக்கும் முதியோர்களுக்கும், இயலாதவர்களுக்கும் அரசு பொது நிதியிலிருந்து உதவி செய்ய வேண்டும்.

இவை மட்டுமல்லாது சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் 4வது பிரிவில் எவரையும் அடிமையாக வைத்துக் கொள்ள உரிமை இல்லை, அடிமை முறை, அடிமை வியாபாரம் அவற்றின்

அனைத்து வடிவங்களிலும் தடை செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இப்பிரகடனத்தில் 5வது பிரிவில் யாரையும் சித்திரவதை செய்வதோ மனித நேயமற்ற கொடுமை செய்யும் நடைமுறைகளுக்கு தண்டனைக்கோ ஆட்படுத்த கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய உயரிய ஐ.நா.வின் மனித உரிமை சாசனத்தில் மனித வர்த்தகம் தொடர்பான பன்னாட்டு கோட்பாட்டில் இந்தியா 1950ல் கையெழுத்திட்டுள்ளது. இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் இந்தியாவில் தொழிலாளர் நல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948

சுரங்க சட்டம் 1951

மனித வர்த்தக தடைச் சட்டம் 1956

ஒப்பந்தக் கூலி ஒழிப்பு சட்டம் 1978

கொத்தடிமைகள் ஒழிப்பு சட்டம் 1976

சம கூலிச் சட்டம் 1976

மேற்கண்ட விவரங்களை பார்த்தால் மத்திய, மாநில அரசுகள் அப்பட்டமாக அத்தனையும் மீறி, தானடித்த மூப்பாக தனது இஷ்டத்திற்கு ஆட்சியாளர்கள் முதலாளி வர்க்கத்திற்கு சாதகமான நிலையைத் தொடர்ந்து கடைபிடிக்கிறார்கள். இதை தவிர்த்து மக்களின் நல்வாழ்வுக்கான மேற்கண்ட அம்சங்களை உருவாக்குவது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் அதிமுக்கிய கடமை என்பது அனைவரும் அறிந்ததே.

### பொதுத் துறை தனியாருக்கு

மத்திய அரசு தேசிய மற்றும் பன்னாட்டு கம்பெனிகளுக்கும், பெரிய தொழில் குழுமங்களுக்கும் வரிச் சலுகைகள் அளிப்பதோடு தொழிலாளர் நலச் சட்டங்களை திருத்தியும் உதவி செய்து வருகிறது. மேலும் இவர்கள் கையில் பொதுத்துறை நிறுவனங்கள் நிலக்கரி, சுரங்கங்கள், ரயில்வே, பாதுகாப்பு, கடல், மலை வளம், பாதுகாப்பு மின்சாரம் போன்ற தேசிய செல்வங்கள் மற்றும் இந்தியாவின் திருக்கோயில்கள் என வர்ணிக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை ஒப்படைக்க விரும்புகிறது. அதில் ஒரு சில துறைகளை பார்ப்போம்.

### ரயில்வே

நாட்டின் கோடான கோடி மக்களின் வாழ்வா தாரங்கள் ரயில்வேயைச் சார்ந்து அமைந்திருக் கின்றன. இப்போது இதனை தனியாரிடம் தாரை



வார்ப்பது இந்தியாவின் சுயசார்பு பொருளாதா ரத்தின் அடிப்படையையே அரித்து வீழ்த்திவிடும்.

151 பயணிகள் ரயில்கள் மற்றும் 109 வழித்தடங்களை தனியாருக்கு விட ஐந்து உள்நாட்டு மற்றும் அந்நிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ரயில்வே அமைச்சகம் டெண்டர் வெளியிட்டுள்ளது. நிதி ஆயோக் அறிவித்த அதே வழித்தடங்களில் 151 ரயில்கள் ஓட 35 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு லைசென்ஸ் தரப்படும். 151 ரயில்களில் தெற்கு ரயில்வேக்கு 11 ரயில்கள் ஒதுக்கீடு 2025இல் 500 தனியார் வண்டிகள் ஓட்ட அரசு முடிவு எடுத்துள்ளது. அத்துடன் 30% சரக்கு போக்குவரத்து தனியாரிடம் ஒப்படைக்க முடிவு எடுத்துள்ளது. அதேபோல் 750 ரயில் நிலையங்களில் 30 சதவீதம் ரயில் நிலையம் தனியாரிடம் ஒப்படைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### நிலக்கரி

சுரங்கத் தொழில் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவிப்பு. இதை எதிர்த்து சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் முழு அளவில் நடைபெற்று பெரும் வெற்றி பெற்றுள்ளது.

மத்திய நிதியமைச்சர், நிலக்கரி சுரங்கத் துறை முற்றிலும் தனியாருக்கு திறந்து விடப்படுவதாகவும் யார் வேண்டுமானாலும் சுரங்கங்களை ஏலம் எடுத்து நிலக்கரியை வெட்டி பொது சந்தையில் விற்பனை செய்யலாம் என்றும் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்த ரூ. 50,000 கோடி ஒதுக்கப்படுவதாகவும் அவர் கூறினார். பிரதமர் மோடியும் இதன் மூலம் போட்டியும் வெளிப்படைத்தன்மையும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக தம்பட்டம் அடித்தார். கோல் இந்தியா லிமிடெட் அரசு நிறுவனம் உலகின் மிகப்பெரிய நிலக்கரி சுரங்க நிறுவனம். உலக அளவில் நிலக்கரி மூலம் மின்சாரம் அதிகம் பெறும்

நாடுகளில் இந்தியா மூன்றாவது இடம். நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 2வது இடம். இந்தியாவின் ஒட்டுமொத்த மின்சார உற்பத்தி 54.2% நிலக்கரியை சார்ந்துள்ளது.



இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் நிலக்கரி சுரங்கத் துறை முற்றிலும் தனியாருக்கு தர மத்திய அரசு முடிவு செய்துள்ளது சுயசார்பிற்கான அடித்தளத்தையே தகர்ப்பதாகும்.

இந்தியாவின் மத்தியப் பகுதியில் 80 புதிய சுரங்கங்களை ஏலம் விட முடிவு செய்திருப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பு அனுபவம் இல்லாத வர்களும் ஏலம் எடுக்கலாம் என்ற மத்திய அரசின் அறிவிப்பு வினோதமானது. ஒருபுறம் தேசபக்த போலி வேஷம், மறுபுறத்தில் தேசவிரோத தனியார்மயம்.

மத்திய அரசு இந்த முடிவை திரும்பப் பெறவில்லை என்றால் ஆகஸ்ட் 18ஆம் தேதி முதல் மீண்டும் முழுமையான வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

## விலைவாசி உயர்வு

நாளுக்கு நாள் உயர்ந்து வரும் விலைவாசி உயர்வு பொது மக்களை வறுமையில் தள்ளி விடுகிறது. இந்த கொரோனா தொற்றுநோய் காலத்தில் மத்திய அரசு பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு போன்றவற்றின் விலை மேலும் மேலும் உயர்த்தப் பட்டு வருகிறது. 15 தினங்களுக்கு ஒரு முறை என்ற கணக்கில் விலை ஏற்றப்பட்டு வருகிறது. சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் 16 டாலர் என்று இருந்தாலும் விலை உயர்த்தப்பட்டதால் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் வாங்கும் பொருட்களின் விலை செங்குத்தாக உயர்ந்துள்ளது. இந்த காலகட்டத்தில் ஊரடங்கால் வேலை இல்லாமல் மக்கள் கையில் பணமில்லை, வாங்கும் சக்தி இழந்து பரிதவித்து நிற்கிறார்கள். ஆனால் அரசு வரி விதிப்பின் மூலமும் தொடர்ச்சியான விலையேற்றங்களின் மூலமும் பணம் சம்பாதித்து வருகிறது. அரசின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாக அவர்கள் அடிமைத்தனத்திலும் வறுமையிலும் தள்ளப்பட்டு ஏராளமானோர் தற்கொலை செய்து வருகிறார்கள்.

## தமிழகத்தில்...

மாநில செயற்குழு முடிவின்படி 8.7.2020 முதல் 10.7.2020 வரை கொரோனாவை தடுப்போம் கடமையென இழந்ததை மீட்போம் உரிமையென பிரச்சார இயக்கம் 14.7.2020 அன்று ஆர்ப்பாட்டமும் மாவட்ட ஆட்சியரிடம் பெருந்திரள் முறையீடும் என முடிவாற்றப்பட்ட நிலையில் மத்திய அரசு உழைப்பாளி மக்களுக்கு எதிராக இத்தகைய நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி இருக்கின்ற சூழலில் தமிழக அரசின் நிலை என்ன?

தமிழகத்தில் மத்திய அரசு கடைபிடிக்கின்ற அதே தாராளமயக் கொள்கைகள், மக்கள் அறிந்து கொள்ள முடியாத பல்வேறு வடிவங்களில் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக தமிழகம் ரூ.5.5 லட்சம் கோடி கடனில் தள்ளாடிக் கொண்டிருக்கக் கூடிய நிலையில் இதனை சரி செய்வதற்கான நடவடிக்கையை திட்டமிடாமல் தமிழக நிதிநிலை குறித்து மக்களிடையே கேள்வி எழுந்து விடக்கூடாது என்ற நோக்கோடு ஒரு சில இலவச திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாகத்தான் அரசு ஊழியர்களுக்கு அதிக ஊதியம் வழங்கப்படுகிறது என்ற பொய்யான தகவலை அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா தமிழகத்தில் நாளுக்கு அதிகரித்து கொண்டே வருகிறது. தமிழகத்தில் மார்ச் 24ஆம் தேதி முதல் பொதுமுடக்கம் நடைமுறைப்படுத்தப் பட்ட நிலையில், அனைத்து தரப்பு மக்களும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் ரூ.7500(?) வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக அரசு ஏற்கவில்லை. ஒருமுறை மட்டும் அரிசி அட்டை தாரர்களுக்கு ரூ.1000 வழங்கப்பட்டது. அடுத்து பொதுமுடக்கம் நீட்டிக்கப்பட்ட பகுதிக்கு மட்டும் ரூ. 1000 வழங்கப்பட்டது.

இந்நிலையில் பொது முடக்கம் நீடிக்கும்வரை ரேஷன் பொருட்களை இலவசமாக வழங்க வேண்டும். மேலும் குடும்பத்திற்கு ரூ. 7,500(?) ஆறு மாத காலத்திற்கு வழங்க மாநில அரசு முன்வர வேண்டும்.

தமிழகத்தில் நிதித் தேவையை பூர்த்தி செய்ய மத்திய அரசிடம் வாதாடி, போராடி தேவையான நிதியை பெற வேண்டும். மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டத்தை 200 நாட்களாக உயர்த்துவதோடு

கூலி ரூ.600 வழங்க வேண்டும். இத்திட்டத்தை பேரூராட்சி மற்றும் நகர்ப்புறங்களுக்கும் விரிவு படுத்த வேண்டும். ஆகஸ்ட் 15ல் கொரோனா தடுப்பூசி நடைமுறைக்கு வந்துவிடும் என்பது சாத்தியமில்லாதது ஆகும்.

கொரோனா தொற்றுநோய் அதிவேகமாக பரவிக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் அரசு ஊழியர்கள் இந்நோய் தடுப்பு பணிகளில், முன் களப்பணி செய்து கொண்டு இருக்கும் போது தமிழக அரசு அரசு ஊழியரின் அகவிலைப்படி 18 மாதங்களுக்கு முடக்கம், மத்திய அரசு அறிவிக்காத சரண்டர் விடுப்பு ரத்து, இரு வழி பயணச் சலுகை ரத்து, பொது சேமநல நிதி வட்டி குறைப்பு, புதிய நியமன தடை, எந்த சங்கமும் கோரிக்கை வைக்காத ஓய்வு பெறும் வயதை 58ல் இருந்து 59ஆக உயர்த்துவது போன்ற போராடிப் பெற்ற சலுகைகளை இந்தக் கொரோனா தொற்று காரணமாக வைத்துக் கொண்டு பொது ஊரடங்கு கணக்கில் கொண்டு, அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது தொடர் தாக்குதலை மீண்டும் மீண்டும் தொடுத்துக் கொண்டு வருகிறது. இந்தப் பறிக்கப்பட்ட சலுகைகளினால் ரூ.17,300 கோடி தமிழக அரசுக்கு கஜானாவுக்கு சேர்ந்துள்ளது.

மத்திய அரசிடம் தமிழகத்திற்கு தரவேண்டிய நிதி ஆதாரத்தை கேட்டுப் பெறாமல் அரசு ஊழியர், ஆசிரியர்களின் பெற்றுக்கொண்ட சலுகைகளை பறிப்பதை தமிழக அரசு, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது மாதிரி தெரிகிறது. எனவே உடனடியாக கைவிடவேண்டும் என வலியுறுத்தி 8.5.2020ல் தமிழகம் முழுவதும் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


அதேபோல் தேசிய எதிர்ப்பு தினம் 3.7.3020 தமிழகத்தில் அரசு ஊழியர் சங்கம் அனைத்து மாவட்டங்களில் தமிழக அரசின் அச்சுறுத்தலையும் மீறி மிகவும் உணர்வுபூர்வமாக அதிக எண்ணிக்கை யில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இருப்பினும் தமிழக அரசு அனுதினமும் அரசாணை பிறப்பித்துக் கொண்டுள்ளது ஊழியர்கள் கடுமையான பணிச்சுமையை ஏற்றுக்கொண்டு கொரோனா பணியை, உயிரையே துச்சமென மதித்து களப்பணியாற்றி கொண்டு உள்ளார்கள். தொற்றுநோய் பணியிலும், களப்பணியில் ஈடுபட்டு இறந்த அரசு ஊழியர்களுக்கு அரசு ஊழியர் சங்கம் சார்பில் 14.4.2020 அரசுக்கு கோரிக்கை வைத்தோம்.

அதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22.4.2020 கொரோனா பணியில் ஈடுபட்ட அரசு ஊழியர்களுக்கு காப்பீடு ரூ.50 லட்சம் வழங்கப்படும், இறந்த ஊழியர்களின் குடும்பத்திற்கு தகுதியின் அடிப்படையில் பணி நியமனம் அறிவித்தார். ஆனால் திருச்சி மாவட்ட கிராம நிர்வாக அலுவலருக்கு மட்டுமே வழங்கப்பட் டுள்ளது. 20க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் இறந்துள்ளார்கள். அனைவருக்கும் ரூ. 50 லட்சம் காப்பீடு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வருக்கு கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

ஜாக்டோ-ஜியோ சார்பாக கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்று 5062 பேருக்கு 17பி குற்றக் குறிப்பாணை, வழக்குகள் ரத்து செய்ய வேண்டும், அதில் பங்கேற்றதற்காக நமது முன்னாள் மாநிலத் தலைவர் தோழர் எம்.சுப்பிரமணியம், அரியலூர் மாவட்ட தலைவர் தோழர் நமச்சிவாயம், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை கு.உதயகுமார், புகழேந்தி, நடேசன், ராஜாராம், பி.எல்.அன்பு மற்றும் கே.சிவானந்தம் ஆகியோரின் பணி ஓய்வு பெறும் நிலை தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்ய வேண்டும்.

### வேலை வாய்ப்பு பறிப்பு

குறிப்பாக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பாமல் இளைஞர்களின் வேலைவாய்ப்பை மத்திய, மாநில அரசுகள் தட்டிப்பறித்து அரசாணைகளை பிறப்பித்து வருகிறது. அது தான் சமீபத்தில் தமிழக அரசு, அரசு ஊழியர் வயது 58லிருந்து 59ஆக உயர்த்தியது. தமிழகத்தில் அரசுத் துறைகளில் 4 லட்சம் பணியிடம் காலியிடம், 80 லட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள். அதையெல்லாம் தமிழக அரசு பூர்த்தி செய்யாமல் இன்று கொரோனா நோய்த் தொற்று பாதிப்பு அதிகமாகி கொண்டிருக்கும் நேரத்தில் இது தான் சரியான தருணம் என்று மருத்துவத் துறை, பொது சுகாதாரத் துறையில் செவிலியர்கள், ஆய்வக நுட்பனர், சுகாதார ஆய்வாளர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதை கைவிட்டு காலமுறை ஊதியத்தில் பணி நியமனம் வழங்கக் கோரி, தமிழக அரசுக்கு கோரிக்கை மனு அளித்துள்ளோம்.



அடுத்து முக்கிய கோரிக்கையான கொத்தடிமைக் கூலி முறையான தொகுப்பூதிய முறை ஒழிக்கப்பட்டு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். குறிப்பாக சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், எம்ஆர்பி செவிலியர்கள், ஊர்ப்புற நூலகர்கள் உள்ளிட்ட மூன்றரை இலட்சம் பேர் தொகுப்பூதியத்தில் தமிழ்நாட்டில் பணிபுரிகிறார்கள். முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா தேர்தல் வாக்குறுதியில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொகுப்பூதிய முறை ஒழிக்கப்பட்டு காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்றார். அதே வழியில் ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்கிற தமிழக அரசு கோரிக்கைகளை நிறைவேற்ற மறுத்து வருகிறது.

அதே போல் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் இணைந்து கொண்டு ஊழியர் விரோத போக்கை கடைபிடிக்கும் அதிகாரிகளை எதிர்த்தும், ஆட்சியாளர்களை எதிர்த்தும் ஜனநாயகபூர்வமாகப் போராடிய கரூர் மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்து வந்த முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் தோழர் சுப்பிரமணியன் மற்றும் 4 செவிலியர்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல், அதேபோல் கோவை மாவட்ட அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் தோழர் செந்தில்குமார் உட்பட 3 தோழர்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் செய்ததை வன்மையாக கண்டிப்பதோடு, நாகை மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன் பதவி இறக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை சந்தித்து முறையீடு கொடுத்துள்ளோம். அதன் தொடர்ச்சியாக இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட பிறகும் தவறுகளை உணர்ந்து தன் நிலைபாட்டை திருத்திக் கொள்வதற்கு மாறாக சிலர் நடத்தும் போராட்டங்களைக் கண்டு அஞ்சப் போவதில்லை என்று ஆணவப்போக்கோடு பேசி வருகிறார்கள். அவர்களுக்கு ஒன்றை உணர்த்த வேண்டியுள்ளது.

இந்திய நாடு அடிமைப்பட்டிருந்த காலத்தில் அன்றைய மக்கள் தொகை 30 கோடியாகும். ஆனால் அன்று விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர் சில ஆயிரம் பேர் மட்டுமே. அவ்வாறு சிலர் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்து பெற்ற விடுதலையின் மூலம் ஏற்பட்டிருக்கக்கூடிய அரசமைப்பில் தான் நீங்கள் ஆட்சிப் பணி அலுவலர் மற்றும் அதிகாரிகளாக இருக்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். இன்று போராடும் தொழிற்சங்கங்கள் இந்திய விடுதலைப் போராளிகளின் வழிவந்தவர்கள் என்பதும் எத்தனை அடக்குமுறைகள் வந்தாலும் அநீதிக்கு எதிராகப் போராடுவதற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தயங்காது என்பதனை ஒட்டுமொத்த அதிகார வர்க்கத்துக்கு உணர்த்த வேண்டிய காலம் வெகுவிரைவில் வரும்.

### புதிய பென்சன்

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை வழங்கப்பட்ட வல்லுநர் குழு அறிக்கை எந்த நிலையில் உள்ளது என தெரியவில்லை. சட்டத்திற்கு புறம்பாக கடந்த 17 ஆண்டு காலமாக தமிழகத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய ஓய்வூதிய திட்டத்தில் ஆய்வு என்ன இருக்கிறது என்பது புரியாத புதிராக இருக்கிறது.



தோழர்களே,

ஆட்சியாளர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளின் பின்புலத்திலும் ஒரு அரசியல் இருக்கிறது. அந்த அரசியலை புரிந்து கொண்ட சுவிஸ் மக்கள் தங்களுக்கு கிடைக்கிற பொருளாதார ஆதாயத்தை புறந்தள்ளி தேச நலனே முக்கியம் என்ற அடிப்படையில் அந்த ஆட்சியாளர்களின் கவர்ச்சிகரமான அறிவிப்புக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

நம் தேசத்திலும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகிற ஒவ்வொரு நடவடிக்கைக்கு பின்புலத்திலும் ஓர் அரசியல் இருக்கிறது. அந்த அரசியலை நாமும் மக்களும் புரிந்துகொண்டு விதத்தில் விரிவான பிரச்சாரங்களை முன்னெடுத்துச் செல்வோம்.

எனவே நாம் நம்முடைய கோரிக்கைகளுக்காக மட்டுமல்லாது அதிகார வர்க்கத்தின் அத்துமீறிய மற்றும் அரசு விதிகளுக்கு புறம்பான செயல்பாடுகளுக்கு எதிராக போராட வேண்டியுள்ளது இன்றைய காலத்தின் கடமையாக உள்ளது. அத்திசை வழியிலான போராட்டங்களை நடத்தி வெற்றி பெற முழுவீச்சில் களமிறங்கிப் போராடுவோம். ❖

# மரணத்திற்குப்பின் எப்படி நினைவில் கொள்ளப்பட விரும்புகிறீர்கள்?

“தோழர், உங்கள் மரணத்திற்குப் பின் நீங்கள் எப்படி நினைவில் கொள்ளப்பட விரும்புகிறீர்கள்?’’

நேற்று என் அலுவலக நண்பர் கணேசன் என்னைப் பார்த்து கேட்ட இந்தக் கேள்வியிலிருந்து இன்னமும் வெளியில் வர முடியவில்லை என்னால். நேற்று காலையில் என்னுடைய வீட்டு வராந்தாவில் ஈஸி சேரில் உட்கார்ந்தபடி எப்.எம்.இல் பாட்டு கேட்டுக்கொண்டிருந்தேன். “எலும்புக்கும் சதைக்கும் மருத்துவம் கண்டேன் இதற்கொரு மருந்தைக் கண்டேனா...? இருந்தால் அவளைத் தன்னந்தனியே எரியும் நெருப்பில் விடுவேனா? வாழ்க்கை என்பது வியாபாரம், இதில் ஜனனம் என்பது வரவாகும், வரும் மரணம் என்பது செலவாகும்... போனால் போகட்டும் போடா...’’ வாழ்க்கையின் ஆற்றாமையை தன்னுடைய கந்தர்வக் குரலால் கண்ணதாசனின் வரிகளில் பாடிக்கொண்டிருந்தார் டிஎம்எஸ். என்ன ஒரு அற்புதமான வரிகள்... பாடலை லயித்துக் கொண்டே கண்மூடி ஆழ்ந்திருந்த வேளையில் கணேசன் கொஞ்சம் அதிர்ச்சியுடனும் திகிலுடனும் வந்தார். ‘‘தோழர் நம்ம ஆபீஸ் அக்கவுண்ட்ஸ் செக்‌ஷன்ல இருப்பாரே சங்கர் அவர் இன்னிக்கு காலையில இறந்துட்டாராம்’’ என்றார். அவர் சொன்னது எனக்கே அதிர்ச்சியாக இருந்தது, ஆனாலும் எந்த சங்கர் என்று உறுதிபடுத்திக்கொள்ள வேண்டி, “எந்த சங்கர் கணேசன், நம்ம ஆபீஸ்ல நாலஞ்ச சங்கருங்க இருக்காங்களே?’’ என்றேன்.

“அட அக்கவுண்ட்ஸ்ல இருப்பாரே ‘சப்பாணி சங்கர்’ உங்களுக்கு நல்லாத் தெரியும் தோழர்’’ என்றார் கணேசன். “ஓ. அவரா? நேற்றுகூட பில் செக்‌ஷன் வழியா போகும்போது அவரை நான் பார்த்தேனே. என்ன ஆச்சாம்?’’ என்றேன். “கொரோனான்னு சொல்றாங்க. திடீர்னு மூச்சு விடமுடியாமப் போய் ஆஸ்பத்திரிக்கு போற வழியிலேயே இறந்துட்டாராம்’’ என்றார் கணேசன். அந்த இறப்பு வருத்தமாக இருந்தது. அதைவிட வருத்தமாக இருந்தது தோழர் கணேசன் சொன்னது. “தோழர் நீங்களெல்லாம் அவரை ‘சப்பாணி சங்கர்’னு கூப்பிடறது எனக்கு சரியாப் படலை. ஏதோ கொஞ்சம் உடல் குறைபாடு அதனால தாங்கித் தாங்கி நடக்கறவரை சப்பாணிங்கறது தப்பு’’ என்றேன். நான் சொன்னது கணேசனுக்கு கோபத்தை உண்டாக்கியது. “தோழர் இறந்துபோன அந்த சங்கரை நீங்க எப்படி இன்னார்னு தெரிஞ்சுகிட்டீங்க? நான் சப்பாணின்னு சொன்னதுனாலதானே. திங்கட்கிழமை ஆபீஸுக்கு வாங்க அவரை எப்படி அடையாளப்படுத்தி நம்ம ஊழியர்கள் பேசறாங்கன்னு பாருங்க’’ என்றார். அப்படி சொன்னவர் அதோடு நிறுத்தவில்லை. “தோழர் உங்க மரணத்துக்கு அப்புறம் நீங்கள் எப்படி நினைவில் கொள்ளப்பட விரும்பறீங்க. ஏன்னா உங்க பேருலயும் நம்ப ஆபீஸ்ல நாலஞ்சு பேர் இருக்காங்க’’ என்றார். அவர் சொல்லிவிட்டுப் போனதிலிருந்து எனக்கு அதே நினைவாக இருந்தது. உண்மையில் நம் மரணத்திற்குப் பிறகு நம்மை நம் சக ஊழியர்கள், அக்கம்பக்கத்தார் அல்லது இந்த சமூகம் எப்படி நினைவில் கொள்ளும்?

ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னால், ஆல்ஃப்ரட் நோபல் - இவர் டைனமைட் என்ற வெடிபொருளைக் கண்டுபிடித்தவர், காலை செய்தித் தாளை பார்த்துக் கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக ‘நீத்தார்’ பகுதியில் அவரது பெயர் வந்துள்ளதைப் பார்த்து ஆச்சர்யமும் திகிலும் அடைந்தார். உண்மையில் அந்த செய்திப் பத்திரிகைக்காரர்கள் வேறு ஒரு நபரின் இறப்பைப் போடுவதற்கு பதிலாக இவருடைய பெயரை போட்டுவிட்டார்கள். இவரும் அந்த பத்திரிகைக்கு போன் செய்து தவறாக செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது என்று சொல்வதற்கு பதிலாக, மக்கள் தன்னுடைய இறப்பைப் பற்றி என்ன பேசுகிறார்கள் என்று அறிந்துகொள்ள விரும்பி அதை அப்படியே விட்டுவிட்டார். அடுத்த நான் காலையில் அவர் மரணத்தைப் மக்கள் என்ன

பேசிக் கொண்டார்கள் என்ற விவரத்தை அறிய செயதித்தாளை திறந்தார். நீத்தார் பகுதியில் "டைனமைட் மன்னன் இறந்துவிட்டான்'' என்றும் "இனி இந்த வெடி வெடிக்காது'' என்றும், அவர் "சாவின் வியாபாரி'' என்றும் குறிப்பிடப்பட்டிருந்து. அவர் "சாவின் வியாபாரி'' என்ற வார்த்தைகளைப் படித்தபோது இப்படித்தான் நான் நினைவில் கொள்ளப் போகிறேனா? என்ற கேள்வியை அவர் தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டார். அவர் தனது உணர்வுகளில் மூழ்கி "இந்தமாதிரி நான் நினைவில் கொள்ளப்பட மாட்டேன்'' என்று முடிவெடுத்தார். அந்த நாளிலிருந்து அவர் அமைதியை நோக்கிப் பணியாற்றத் தொடங்கினார். அந்த ஆல்ஃப்ரெட் நோபல்தான் இன்று மாபெரும் 'நோபல்' விருதுக்கான பெயரோடு அழைக்கப்படுகிறார். தனது உணர்வுகளுடன் தொடர்பு கொண்டு தனது மதிப்புகளை மறுவிளக்கம்செய்து மாற்றிக்கொண்டவர் அவர்.

இந்த உலகில் இந்த சமூகத்திற்கு நாம் விட்டுச் செல்லப்போவது என்ன? நாம் இந்த உலகத்தின் மனதில் என்னவாக இருக்க வேண்டும்? அன்புடனும் மரியாதையுடனுமா? அல்லது புரட்சியுடனும் போர்க்களங்களுடனும் தொடர்புபடுத்தி இருக்க வேண்டுமா? நம்முடைய இருப்பை நாம் இல்லாத போதும் இந்த உலகம் நினைத்துப் பார்க்கும்படி இருக்க வேண்டுமா? இவற்றுக்கெல்லாம் நமக்குத் தேவை தகுதியா, திறமையா, கல்வியா, மனப்பான்மையா?

வரலாற்றின் பக்கங்களில் நம் பெயர் இடம்பெற நாம் நன்கு படித்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், நடிகர் டாம் குரூஸ், விஞ்ஞானி, ஓவியக் கலைஞரான லியனார்டோ டாவின்ஸி, விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இவர்களெல்லாம் கல்வியறிவு பெற்றவர்கள் இல்லை. நம்ம ஊரில் பெரிய கல்வியெல்லாம் படிக்காத பகுத்தறிவுத் தந்தை என போற்றப்படுகிற பெரியார், படிக்காத மேதை என்ற பாராட்டப்படுகிற கர்மவீரர் காமராஜர், கலைஞர் கருணாநிதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரன் போன்றவர்களை நாமும் நம் தலைமுறைகளும் கொண்டாடவில்லையா?

உடல்குறைபாடுகள் நம் சாதனைகளுக்கு தடையாக இருந்துவிட முடியாது என்று நிரூபித்த புகழ்பெற்ற கவிஞரும் ஆசிரியருமான பார்வை குறைபாடுடைய ஜான் மில்டன், கார்ட்டூனிஸ்டும் நகைச்சுவையாளருமான ஜேம்ஸ் தப்பார், திக்குவாய் பிரச்னை இருந்த உலகப் புகழ் பெற்ற நடிகர் ஜேம்ஸ் எர்ஸ் ஜோன்ஸ். இசையில் உச்சபட்ச சாதனையான ஒன்பதாவது சிம்பொனியை படைத்த காது கேட்காத பீத்தோவன், பார்வையில்லாமல் மருத்துவப்படிப்பை படித்து முடித்த டேவிட் டபிள்யூ.ஹார்ட்மேன்... இப்படி வரலாற்றின் பக்கங்கள் முழுவதிலும் ஆயிரக்கணக்கானோர் தங்கள் குறைபாடுகளை மீறிய சாதனைகளால் நினைவில் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த சாதனைகளுக்கு முக்கியமாக இருந்தது எது இடைவிடாத முயற்சிகளும், பயிற்சிகளும்தான். நம்மால் முடிந்த செயல்களை எல்லாம் செய்து கொண்டே இருந்தால் நம்மால் முடியாது என்று சொல்லப்பட்ட செயல்களும் ஒருநாள் சாத்தியப்படும் என்கிறார் தாமஸ் எடிசன். இதற்குத் தேவை ஒன்றுபட்ட மனப்பாங்கு. இன்று மக்கள் தொகையில் ஒரு சதவீதம் கூட இல்லாத பெருமுதலாளிகளும், அரசியல்வாதிகளும் 99 சதவீத மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கத் துணிகிறார்கள் சுரண்டுகிறார்கள் என்றால் அவர்களை அடித்து வீழ்த்த நல்ல அஸ்திவாரத்துடன் கூடிய அஸ்திரம் வேண்டும். கனடாவில் உள்ள கால்கரி கட்டிடம் 190.8 மீட்டர் உயரமுள்ளது. இந்தக் கட்டிடத்தின் மொத்த எடை 10,884 டன்களாகும் இதில் கிட்டத்தட்ட 60 சதவீதம் அதாவது 6,349 டன்கள் பூமிக்கடியில் உள்ளது. அதாவது ஒரு பெரிய கட்டிடம் ஒரு பலமான அஸ்திவாரத்தின் மேல் நிற்பது போலவே வெற்றியும் கூட பலமான அஸ்திவாரத்தின் மேல் நிற்க வேண்டும். நமது மனப்பாங்கே நமது வெற்றியின் அஸ்திவாரமாகும்.

ஆகவே தோழர்களே நாம் இழந்துவிட்ட அல்லது நம்மிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுக்கவும், இருக்கின்ற உரிமைகளைக் காக்கவும், நம்முடைய உரிமைகளை பறிக்க திட்டமிடும் கார்ப்பரேட் அரசாங்கங்களை அஞ்சாமல் எதிர்த்து நின்று வெற்றிபெறவும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு அஸ்திவாரம் அமைப்பது அவசியமாகும். இந்த அஸ்திவாரம்தான் நாம் எத்தனை முறை வீழ்ந்தாலும் எழுந்து நிற்கும் வல்லமை தரும். வரலாறு நமக்கு சொல்லும் செய்தி என்னவென்றால் எல்லா வெற்றிக்கதைகளும் பல தோல்விக் கதைகளின் துவண்டுவிடாத தொகுப்பு என்பதே. தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் முன்னேறிச் சென்றுகொண்டே இருப்போம். நமது மரணத்திற்குப் பின் நாம் எப்படி நினைவில் கொள்ளப்படுவோம் என்பதை வரலாறு பார்த்துக் கொள்ளும்.

**- ஜிஜி**

# அரசின் தந்திரமும் அதை வீழ்த்தும் ஸ்தாபனமும்



> **வே**லையற்றவனாக பட்டினியோடு இருப்பனுக்கு தனிநபர் சுதந்திரம் என்பது எதுவாக இருக்கமுடியும் என்றால் என்னால் கற்பனை செய்ய முடியவில்லை
>
> **- ஜோசப் ஸ்டாலின்**

**இ**ந்தியாவில் வேலைவாய்ப்பின்மை என்பது புதிதாக தோன்றியதல்ல. பல வருடங்களாக இந்திய நாட்டின் பொருளாதாரம் ஏற்ற இறக்கங்கள் கண்டபோதும் வேலைவாய்ப்பில்லா வளர்ச்சி (Jobless Growth) என்ற நிலையில்தான் இருந்தது. சர்வதேச தொழிலாளர் ஆணையம் வேலைவாய்ப்பில்லாதவர் (Unemployee) என்று யாரை குறிப்பிடு கிறது என்றால் படித்து அதன் தகுதிக்கேற்ப பணி செய்யக்கூடிய, எட்டு மணிநேரம் உழைக்கக் கூடிய, வேலை செய்ய விருப்பமுடைய, 15 வயதுக்கு மேற்பட்ட ஒருவருடைய வேலையில்லா நிலையை குறிப்பிடுகிறது. உலக நாடுகளில் சீனாவிற்கு அடுத்ததாக நம் இந்தியாவில் தான் மனிதவளம் குறிப்பாக 18 வயது முதல் 40 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். இந்த மனிதவள ஆற்றலை குறிவைத்து உலக முதலாளித்துவத்திற்கு பயன்படும் வகையில் பாசிசத்தின் சூழ்ச்சியால் இந்திய இளைஞர்களுக்கு திட்டமிட்டு உருவாக்கப்படுவதுதான் வேலையில்லா திண்டாட்டம்.

சமீப காலங்களில் தனியார் கல்லூரிகள் மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள், புற்றீசல்கள் போல தொடங்கப்பட்டன. பொறியியல் பட்டப்படிப்பு என்பது எட்டாக் கனவாக இருந்த விளிம்பு நிலை மக்களின் பிள்ளைகளும் பொறியியல் கல்லூரிகளில் சேர வங்கிகள் கல்விக்கடன்களை வாரி வழங்கின. வங்கியில் பெற்ற கல்வி கடன் சுமையானது படிக்கும் மாணவர்களின் தலையில் ஏற்றியது. மாணவர்கள் பெற்ற கடன்தொகை தனியார் கல்லூரி நிர்வாகத்தின் வங்கி கணக்கில் சேர்ந்தது. இங்கு தான் பாசிசத்தின் கோர முகம் படித்த இளைஞர்களின் வாழ்க்கையை எவ்வாறெல்லாம் சூரையாடுகிறது என்பது வெளிப்படுகிறது.

உண்மையாகவே மாணவர்களின் கல்வி நலனில் அக்கறைகொண்டு கல்வி கடன்களை இந்த அரசு வழங்குமானால் அவர்கள் படித்த

கல்வி தகுதிக்கேற்ப அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் படித்து விட்டு கடன் சுமையோடு இச்சமூகத்திற்கு வரும் இளைஞர்கள் கல்விகடனை திரும்ப செலுத்துவதற்காகவும் குடும்ப வறுமைக் காரணமாகவும் கல்வித் தகுதிக்கேற்ப வேலை கிடைக்கும் வரை பகுதி நேர வேலைக்கும் (Part Time Job), தன் கல்விச் சான்றிதழை மூன்று அல்லது ஐந்து வருடங் களுக்கு தனியார் நிறுவனங்களிடம் கொடுத்து ஒப்பந்த அடிப்படையில் பணிக்கும் செல்ல வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படு கிறார்கள். தகுதிக்கேற்ப வேலை கிடைக்காமல் கிடைத்த வேலையை செய்யக்கூடிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டு முதலாளித்துவத்தால் வைக்கப்படும் பொறியில் குறிவைத்து வீழ்த்தப்படுகிறார்கள்.

அந்நிய நிறுவனங்களான ஓலா, உபேர், சுமோட்டடோ, ஸ்விக்கி, அமேசோன் போன்ற ஏராளமான நிறுவனங்கள் இந்தியாவில் சொற்ப ஊதியம் கொடுத்து படித்த இளைஞர்களின் அறிவையும் உழைப்பையும் சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருக்கின்றன. பட்டம் பெற்ற மாணவர்கள் தூய்மை பணியாளர் பணியிலும், கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி திட்டத்தின் கீழ் பணிக்கும் விண்ணப்பிக்கின்றனர்.

அது மட்டுமல்லாமல் படித்து தகுதிக்கேற்ப வேலையற்றவர்களாக அரசால் திட்டமிட்டு உருவாக்கப்படும் இளைஞர்களை தன்அடக்கு முறை கருவியாக ஆளும் அரசுகள் பயன்படுத்து கிறது. எவ்வாறு என்றால் ஏற்கனவே பணியில் இருக்கக்கூடிய அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர்களின் பறிக்கப் படும் உரிமைகளுக்காக போராடும்போது ஆளும் அரசுகள் போராட்டக்காரர்களையும் அவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களையும் ஒடுக்க தற்காலிக பணிநீக்கம் அல்லது நிரந்தர பணி நீக்கம் செய்துவிட்டு ஏற்கனவே பணிபுரிந்த வர்கள் பெறும் சம்பளத்தை விட மிககுறைந்த தொகுப்பூதியம் வழங்கி அவர்களை பணியமர்த்த முனைகிறது.

இதன் மூலம் வர்க்கப் போராட்டங்களை ஒடுக்க நினைக்கிறது. 2003 ஜூலை 2ல் தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்க அரசு ஊழியர் சங்கம், ஆசிரியர் அமைப்புகள் ஒன்றிணைந்து மாபெரும் இயக்கமாக ஜாக்டோ-ஜியோ என்ற பேரமைப்பின் கீழ் ஒன்றுபட்டு நடத்திய எழுச்சி மிக்க போராட்டத்தின் போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மீள பணிக்கு திரும்பக்கூடாது என்றும் 03.07.2020க்குள் பணிக்கு திரும்பாவிட்டால் டெஸ்மா சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வேலைக்கு வராத அனைவரையும் எவ்வித விசாரணையு மின்றி உடனடியாக பணிநீக்கம் செய்திட 04.07.2003 அன்று எஸ்மா சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து உலகத் தொழிலாளர்கள் போராட்ட வரலாற்றிலேயே எக்காலமும் நடைபெறாத ஒரு நிகழ்வாக அப்போதய தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா அம்மையாரால் ஒரே கையெழுத்தில் ஒரே நேரத்தில் சுமார் 1,70,241 அரசு ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.

பணிநீக்கம் என்று அறிவித்ததோடு நில்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து அரசுப் பணிக்காக காத்திருந்தவர்களை இரவோடு இரவாக 15,500 பேரை வெறும் ரூ.4000/- என நிர்ணயித்து தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்தது. ஏற்கனவே பணியிலிருந்த வர்கள் பறிக்கப்பட்ட உரிமைகளுக்காக போராடும்போது போராட்டக்காரர்களுக்கு எதிரான ஆயுதமாக அரசால் திட்டமிட்டு வேலைவாய்ப்பற்றவர்களாக உருவாக்கப்படும் இளைஞர்களை வைத்து போராட்டங்களை ஒடுக்கும் கருவிகளில் ஒன்றாக பயன்படுத்து கிறார்கள்.

பழைய ஓய்வூதிய திட்டம் வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைளை வலியுறுத்தியும் ஏழாவது ஊதிய நிர்ணயக் குழுவை அரசு அறிவிக்க கோரியும் நடைபெற்ற ஜாக்டோ ஜியோ போராட்டத்தின்போதும் போராட்ட களத்தில் நிற்கும் ஆசிரியர்களை ஒடுக்க நினைத்த ஆளும் அரசு வேலைக்காக பதிவு செய்யப் பட்டிருந்த ஆசிரியர்களை ரூ.10000/- தொகுப் பூதியத்தில் நியமனம் செய்து உத்தரவிட்டது. தமிழ்நாட்டில் மட்டும் 81.30 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து வேலைக்காக காத்திருக்கின்றனர். இதில் பொறியியல் பட்டதாரிகள் 2.45 இலட்சமும், மருத்துவர்கள் 4,307 பேரும் அடங்குவர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கப்படும் 10ம்

வகுப்பு படித்தவர்களுக்கு குரூப்-4 நிலையில் 9,500 பணியிடத்திற்கு 20.83 இலட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிட தனது நிரந்தர கோரிக்கையாகவும் முன்வைத்து காலம்காலமாக தமிழக அரசை வலியுறுத்திவருகிறது. மத்திய, மாநில அரசுகளின் அனுபவமற்ற பொருளாதார கொள்கைகளால் வேலையில்லா திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கல்வி நிறுவனங்களோ தொழில் நிறுவனங் களோ முதலாளித்துவம் எந்த வடியில் இருந்தாலும் பாதுகாக்கப்படுகிறது. கொடிய நோய்த்தொற்றான கொரோனா நோய்த்தொற்றை கூட மத்திய அரசு தனக்கான ஆயுதமாக மாற்றிக்கொண்டு மக்கள் நோயினால் துன்பப்பட்டு பொருளாதார நெருக்கடியால் துயரப்பட்டு மடிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் முதலாளித்துவத்தை மேலும் மேலும் வளர்க்கும் நோக்கில் குடிமக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட அரசுத் துறைகள் பொதுத்துறை நிறுவனங்களை ஒவ்வொன்றாக தனியாருக்கு தாரைவார்த்துக்கொண்டிருக்கிறது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு இந்தியாவில் கோரானா நோய்த் தொற்றினால் 40 கோடி அமைப்புசாரா தொழிலாளர்கள் தங்களின் அன்றாட வாழ்வாதாரத்தை இழந்து மிகமோச மான நிலையில் வறுமையில் வாடுவதாக தெரிவித்துள்ளது. ரஷ்யப்புரட்சியாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியது போல வேலையற்றவராக பட்டினியோடு இருப்பவருக்கு தனிநபர் சுதந்திரம் என்பது எதுவாக இருக்கமுடியும் என்பது சிந்திக்க வேண்டியதாகவுள்ளது.

மத்திய மாநில அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தாங்கள் பணிபுரியும் நிறுவனங்கள் அழிவிலிருந்து எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கவேண்டும். அன்றாட வாழ்வே கேள்விக்குறியாக நிற்கும் அமைப்பு சாரா தொழிலாளர்களையும் நாடெங்கிலும் ஒன்றிணைத்து தொழிலாளி வர்க்க ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த வேண்டும். முதலாளித்துத் தின் கோரப்பிடியில் சிக்கிக்கொண்டிருக்கும் நிறுவனங்களை மீட்கவும் தொழிலார்களுக்கு எதிராக திருத்தப்பட்ட தொழிலாளர் சட்டங்களை மாற்றியமைக்கவும் வேண்டும்.

கொடிய நோய்த்தொற்றான கொரோனா நோய்த்தொற்றை கூட மத்திய அரசு தனக்கான ஆயுதமாக மாற்றிக்கொண்டு மக்கள் நோயினால் துன்பப்பட்டு பொருளாதார நெருக்கடியால் துயரப்பட்டு மடிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் முதலாளித்துவத்தை மேலும் மேலும் வளர்க்கும் நோக்கில் குடிமக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட அரசுத் துறைகள் பொதுத் துறை நிறுவனங்களை ஒவ்வொன்றாக தனியாருக்கு தாரைவார்த்துக் கொண் டிருக்கிறது.

நாடு முழுவதும் வேலைவாய்ப்பு அலுவல கத்தில் பதிவு செய்தும் பதிவு செய்யாமலும் வேலைக்காக காத்திருக்கக்கூடிய மத்திய மாநில அரசுகளால் திட்டமிட்டே வேலைவாய்ப்பற்ற வர்களாக மாற்றப்பட்டிருக்கும் இளைஞர் களுக்கும், எதிர்கால இந்தியாவின் தூண்களான கல்லூரி மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு பறிபோய்க்கொண்டிருக்கும் அபாயத்தை விளக்கி அவர்களின் ஆதரவையும் பெறவேண்டும். வர்க்க ஒற்றுமை என்ற கட்டமைப்பிலிருந்துதான் போராட்டகள வெற்றியை காண முடியும்.

மாமேதை லெனின் தொழிலாளி வர்க்க ஒற்றுமை என்ற தனது கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார். "....தொழிலாளி வர்க்கத்துக்கு ஒற்றுமை அவசியம். வர்க்க உணர்வுடைய எல்லாத் தொழிலாளர்களும் உணர்வு பூர்வமாக முடிவுகளை நிறைவேற்றும் ஒற்றுமையான ஸ்தாபனம் மட்டுமே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். பிரச்சினையை விவாதித்தல், வெவ்வேறு கருத்துக்களை வெளியிடுதல் மற்றும் கேட்டல், அமைப்பு ரீதியான மார்க்சியவாதிகளில் பெரும்பான்மையினரது கண்ணோட்டத்தை கண்டுபிடித்தல், பூர்வாங்க முடிவின் வடிவத்தில் இக்கண்ணோட்டத்தை எடுத்துரைத்தல், இந்த முடிவை கறாராக நிறைவேற்றுதல்" உலகம் முழுவதிலும் அறிவுடையவர்கள் இவற்றையே ஒற்றுமை என்கிறார்கள். அத்தகைய ஒற்றுமை தொழிலாளி வர்க்கத்திற்கு முடிவில்லாத அளவு விலைமதிப்பற்றது, முக்கியமானது ஆகும். தொழிலாளர்கள் பிரிந்து இருந்தால் எதையும் செய்ய முடியாது. அவர்கள் ஒற்றுமையாக இருந்தால் எல்லாவற்றையும் செய்ய முடியும்.

- **தெ.வாசுகி**

# அமெரிக்க ஜனாதிபதியை பதுங்க வைத்த கருப்பின அமெரிக்கரின் எழுச்சி




மனுகுல நாகரிகத்திற்கு முரண்பாடான சில விசயங்கள் உலகின் ஏதாவது ஒரு மூலையில் எப்போதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. விந்தை என்னவென்றால் எப்போது நாகரிகம் தோன்றியதோ அப்போதே "அநாகரிகமும்" தோன்றத் தொடங்கி விட்டன.

தொன்று தொட்டே இருந்து வந்த அநாகரிகங்களில் ஒன்று கருப்பினத்தவரை கொத்தடிமைகளாக நடத்தியது. ஆபிரகாம் லிங்கன் என்ற உன்னத மனிதனின் முயற்சியால் கருப்பினத்தவரின் அடிமைத்தலை அறுத்தெரியப்பட்டது என்பதை நாம் அறிவோம். ஆனால் அமெரிக்காவில் அடிமைத்தலை அகன்றதே தவிர அங்கு கருப்பினத்தவருக்கு சம உரிமை மறுக்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டிலும் நிலவிய அந்த அவலத்தைப் போக்க அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை வழியைப் பின்பற்றி கருப்பினத்தவர்களின் சம உரிமைக்காகப் போராடி உயிர் துறந்த மார்ட்டின் லூதர் கிங். கருப்பினத்தவர்களுக்கு சம உரிமை மறுக்கப்பட்ட அமெரிக்க சூழ்நிலை அவரது மனதை எப்போதுமே அரித்துக் கொண்டிருந்தது. இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் முன்னேற்றத்தில் உலகுக்கே முன்மாதிரியாக விளங்கிய அமெரிக்காவில் அதன் குடிமக்களுக்கு சரிசமமாக வாழும் சூழ்நிலை இல்லை என்பதுதான் வேதனையான உண்மை. கருப்பினத்தவர்களை தீண்டத்தகாதவர்களாக பார்த்தனர் வெள்ளையர்கள். உணவகங்கள், பேருந்துகள், பொழுதுபோக்கு இடங்கள் என எந்த பொது இடத்திலும் கருப்பர்களுக்கு என்று தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அந்த இடங்களை மட்டும்தான் கருப்பர்கள் பயன்படுத்த வேண்டும் மீறினால் சிறைதண்டனை நிச்சயம்.

பல ஆண்டுகள் அவமானங்களைத் தாங்கிக்கொண்டிருந்த கருப்பினத்தவர்கள் ரோஸா பார்க் என்கின்ற கருப்பின பெண் கைது செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சுமார் 50000 கருப்பர்கள் ஆர்பாட்டம் நடத்தினர். அவர்கள் மீது போலீசார் துப்பாக்கி சூடும் நடத்தினர். இருப்பினும் கருப்பினத்தவர்களின் கொந்தளிப்பை அப்பட்டமாக வெளிப்படுத்தும் ஒரு ஆர்ப்பாட்டமாக அது அமைந்தது. 1963ஆம் ஆண்டு வாஷிங்டெனில் மிகப்பெரிய அமைதிப் பேரணிக்கு ஏற்பாடு செய்தார் லூதர் கிங். சுமார் இருநூற்றி ஐம்பதாயிரம் பேர்

அங்கு திரண்டனர் அந்த அமைதிப் பேரணியில்தான் வரலாற்று சிறப்புமிக்க சொற்பொழிவாற்றினார் மார்ட்டின் லூதர் கிங். உலகை மெய் சிலிர்க்க வைத்த பேச்சில் அவர் இவ்வாறு கூறினார்.

எனக்கு ஒரு கனவு உண்டு ஒருநாள் இந்த தேசத்தில் என்னுடைய நான்கு பிள்ளைகளும் அவர்களுடைய தோல் நிறத்தின் அடிப்படையில் அல்லாமல் அவர்களுடைய குணத்தின் அடிப்படையில் வெள்ளையின சிறுவர்களும், கருப்பின சிறுவர்களும் கையோடு கை கோர்த்து நடக்க வேண்டும்.

அமெரிக்காவின் மினாபொலிஸ் பகுதியில் ஜார்ஜ் பெர்ரி ப்னாயிட் என்ற கறுப்பின அமெரிக்கரின் கொடூர மரணத்தை விவரிக்கும் வாசகம் இது. அமெரிக்க காவல்துறை அவரது கழுத்தில் தனது கால் முட்டியால் நெரிப்பது வீடியோவில் பதிவாகி, இணையதளங்களில் பரவலாகியது. அந்த வீடியோ அமெரிக்கா முழுவதும் காட்டுத் தீ போல் போராட்டங்கள் பரவிப் படர காரணமாகவும் அமைந்தது. நியார்க், பிலடெல்பியா, டல்லாஸ், லாஸ்வில்லே, லாஸ்ஏஞ்சல்ஸ் என அனைத்து அமெரிக்க மாகாணங்களிலும் போராட்டம் நடக்கிறது.முதலாளித்துவம் தன் முழங்காலைக் கொண்டு அமெரிக்க ஏழைநடுத்தர மக்களின் கழுத்தை நசுக்குகிறது. மக்கள் மூச்சுவிடுவதற்காக போராடுகிறார்கள். மேற்சொன்ன வாசகம் முதலாளித்துவத்தை விவரிக்கும் வாசகமாகவும் கச்சிதமாகவே பொருந்துகிறது.

### வெள்ளை மாளிகை முற்றுகை

ஜார்ஜ் பெர்ரி ப்ளாயிட் மீதான காவல்துறையின் அடக்குமுறையும், அதனைத் தொடர்ந்து எழுந்த மக்கள் எழுச்சியும் இதுவரை காணாத அளவுக்கு மிகப்பெரியவை. போராட்டக் களத்தில் அனைத்து மக்களும் வேறுபாடில்லாமல் குவிந்திருக்கிறார்கள். இதுவரை 4100 பேரை அரசு கைது செய்திருக்கிறது. கைதாகியிருப்போரில் நியூயார்க் மேயரின் மகளும் அடக்கம்.

### தன்னெழுச்சி போராட்டங்கள்

சீனா, வடகொரியா, ஹாங்காங், கியூபா என தன் அரசியல் எதிரிகளை நோக்கி போலியான ‘மனித உரிமை மீறல்’ குற்றச்சாட்டை முன்வைக்கும் அமெரிக்கா தன் சொந்த மக்களுக்கு எதிராக கடுமையான அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுகிறது. வியட்நாம், ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா உள்ளிட்ட நாடுகளில் அமெரிக்கா நடந்துகொண்ட விதத்தில்தான் தனது சொந்த மக்களையும் நடத்தும் என்பது தெளிவாகிறது. அதுதான் அந்த அரசின் வர்க்கத் தன்மை.

### பதுங்கிக் கொண்ட ஜனாதிபதி

வெள்ளை மாளிகையை தாக்கும் அளவுக்கு அமெரிக்க போராட்டங்கள் தீவிரமடைந்தபோது, அந்த நாட்டின் ஜனாதிபதி டிரம்ப் பதுங்கு குழிக்குச் சென்று தங்கியதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. உழைக்கும் மக்கள் எழுச்சியடைந்தால், முதலாளித்துவம் பதுங்கிக் கொள்ளும் என்பதை இதவிடவும் சிறப்பாக எடுத்துச் சொல்ல முடியாது.

மூச்சிவிடவும் வழியில்லாமல் களத்திற்கு வந்து போராடும் மக்களை முதலாளித்துவம் ஒடுக்க நினைக்கிறது. தன்னெழுச்சிப் போராட்டங்களின் தன்மை மாறுகிறபோது, முதலாளித்துவ ஒடுக்குமுறைகள் தூள் தூளாகும். அந்த வரலாற்றுக் கூட்டம் தவிர்க்க முடியாதது என்பதே மார்க்சியம் காட்டும் உண்மை.

- **மு.பாஸ்கரன்**



## பழி வாங்கும் நடவடிக்கையை கண்டித்து முதல்வர் அலுவலகத்தில் கோரிக்கை மனு

ஜாக்டோ ஜியோவின் உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் பேட்ரிக் ரெய்மாண்ட், ரவிச்சந்திரன் ஆகியோர் தமிழக அரசின் அரசாணையை விமர்சித்து ஊடகங்களில் கருத்து தெரிவித்தார்கள் என்பதாக, கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நெறிக்கும் வகையிலும் மற்ற அமைப்புகளுக்கு எச்சரிக்கை கொடுக்கும் வகையிலும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பழிவாங்கும் நடவடிக்கையான 17(பி) கற்றுக் குறிப்பாணையை உடனடியாக இரத்து செய்யக் கோரி ஜாக்டோ ஜியோ சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை மனு, 6.7.2020 அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அலுவலகத்தில் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் அன்பரசு, வெங்கடேசன் ஆகியோர் நேரில் வழங்கினர். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் மாநில பொருளாளர் வினோத்குமார் உடனிருந்தார்.

# ஜூலை 10: சிப்பாய் புரட்சி தினம்



வட இந்தியாவில் சிப்பாய் புரட்சி வெடித்தபிறகுதான் நாடு முழுவதும் சுதந்திரப் போராட்டம் தீவிரமானது என்பது வரலாறு கூறும் தகவல். ஆனால் அதற்கு முன்பே கிட்டத்தட்ட அதே காரணங்களுக்காக வெள்ளையர்களுக்கு எதிராக நடந்த வேலூர் புரட்சிதான் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர்! வேலூரில் 1806-ம் ஆண்டு ஜூலை 10-ம் நாள் புரட்சி நடந்தது. ஆங்கிலேயரை எதிர்த்து நடந்த இந்தப் புரட்சி வரலாற்றில் பதிவு செய்யப்படவே இல்லை!

வேலூர் கோட்டையில் திப்புசுல்தானின் வாரிசுகளும், உறவினர்களும் சிறை வைக்கப்பட்டிருந்தனர். கோட்டையை வெள்ளைக்கார சிப்பாய்களும் அவர்களுக்குக் கட்டுப்பட்ட இந்திய சிப்பாய்களும் காவல் காத்தனர். இந்தியச் சிப்பாய்களில் இந்துக்களும் முஸ்லிம்களும் அடங்குவர்.

இந்நிலையில், வெள்ளையரைப் போரில் வென்று மீண்டும் திப்புசுல்தானின் வாரிசுகளை மைசூர் அரியணையில் அமர்த்த வேண்டும் என்று திட்டமிட்டனர் திப்பு சுல்தான் குடும்பத்துக்கு விசுவாசமான முகம்மதியர்கள். அதனால் பக்கீர்களைப் போல வேடமிட்டு கிராமம் கிராமமாகச் சென்று பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் மூலம் மக்களுக்குச் சுதந்திர உணர்வை ஊட்டி வந்தனர். விரைவில் பிரெஞ்சுப் படைகள் இந்தியா வரும், வெள்ளையர் ஆதிக்கம் மறைந்துவிடும் என்று நம்பிக்கையூட்டினர்.

இந்தச் சமயத்தில்தான் சென்னை மாநில ஆங்கிலேய படை தளபதி ஜான் ரடாக் என்பவர் சிப்பாய்களுக்கு புதிய தோல் தொப்பியை அறிமுகப்படுத்தினார். அது மாட்டுத் தோலால் செய்யப்பட்டு, மாட்டுக்கொழுப்பு பூசப்பட்டது என்று இந்து சிப்பாய்களும் பன்றித் தோலால் செய்யப்பட்டது என்று முஸ்லிம் சிப்பாய்களும் அந்த ஆணைக்குக் கட்டுப்பட மறுத்தனர். அத்துடன் வீரர்கள் நெற்றியில் விபூதி, நாமம் தரிக்கக் கூடாது, மீசையை ஒரே அளவாக வெட்டிக்கொள்ள வேண்டும், தாடி வளர்க்காமல் ஒட்ட மழிக்க வேணடும் என்றும் கூறப்பட்டது. இது எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தது. தங்களைக் கிறிஸ்துவ மதத்தில் மாற்றவே இந்த முயற்சிகள் என்று சிப்பாய்கள் கருதினர். திப்பு சுல்தானின் மகன்கள் படேல் ஹைதர், இளவரசர்கள் அப்துல் தாலிக், மொகைதீன், மைசுல்தீன், முகமதுயாசில், முகமதுசுபான், ஷேக்கர் அல்லா, சிராசுதீன், இமாலுதீன் உள்ளிட்டோர் சிறையில் இருந்தனர். அவர்களுடைய உறவினர்களும், நண்பர்களும் அரச குடும்பத்தின் பணியாளர்களைப் போல் வேடமிட்டு, புரட்சிக்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தனர். திப்பு குடும்பப் பாதுகாவலராக லெப்டினெண்ட் கர்னல் மேரியேட் இருந்தார்.

1806-ம் ஆண்டு ஜூலை 10-ம் நாள் இரவு இரண்டு மணிக்கு வேலூர் கோட்டையில் புரட்சி வெடித்தது. இந்திய சிப்பாய்கள் சுபேதார் ஷேக் காதம், ஷேக் காசிம், சுபேதார் ஷேக் ஹுசைன் போன்றோர் தலைமையில் சிப்பாய்கள் அணிவகுத்து ஆங்கிலேய அதிகாரிகளை சுட்டுக் கொன்றனர். ஓரிரு ஆங்கிலேய அதிகாரிகள் மட்டுமே உயிர் தப்பினர். புரட்சியில் சிறு பீரங்கிகளும் பயன்படுத்தப்பட்டன. சில அதிகாரிகள் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

பிறகு புரட்சியாளர்கள் கோட்டையைக் கைப்பற்றினர். வெடிமருந்து தயாரிப்புக் கிடங்கும் அவர்கள் வசமானது. கட்டாய தலைப்பாகையை அமுல்படுத்திய கர்னல் மிக்கிராஸும் சுட்டுக் கொல்லப்பட்டார். இளவரசர்களும் அவர்களது பணியாட்களும் புரட்சியாளர்களுக்கு இனிப்புகளையும் பானங்களையும் வழங்கினர். திப்புசுல்தானின் புலிக்கொடியை ஏற்ற, பொழுது புலர்ந்தது.

அந்தச் சமயத்தில் புரட்சியாளர்களும் இளவரசர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பணியாளர்களும் கோட்டையிலிருந்த கஜானாவை உடைத்துக் கொள்ளையடிக்க முற்பட்டனர். இதில் புரட்சியாளர்களின் கவனம் சிதறியது. அதற்குள் சென்னையிலிருந்தும் வேறு ஊர்களிலிருந்தும் ஆங்கிலப் படைகள் வந்து கோட்டையை மீண்டும் கைப்பற்றியன. ஏராளமான புரட்சிக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தப்பி ஓடியவர்கள் கைது செய்யப்பட்டனர்.

புரட்சிப் படை வீரர்களோடு அப்பாவிகளும் கொல்லப்பட்டனர். அன்று மட்டும் வெள்ளை ஏகாதிபத்தியப் படை கொன்று குவித்தவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தைத் தாண்டியது. 600 பேர் கைது செய்யப்பட்டு கடுமையான தண்டனை பெற்றனர். வேலூர் புரட்சி வெடித்தபோது சென்னை மாகாண கவர்னராக இருந்த லார்ட் வில்லியம் பென்டிங்கும் மாநில முதன்மை படை தளபதி சர்ஜான் ரடாக்கும் பதவியிலிருந்து பிரிட்டிஷ் அரசால் நீக்கப்பட்டனர். வேலூர் புரட்சி நடந்து 50 ஆண்டுகளுக்குப் பிறகு சற்றேறக்குறைய அதே காரணங்களுக்காக வட இந்தியாவில் சிப்பாய் புரட்சி மீ?ண்டும் மூண்டது.

**- பெரணமல்லூர் சேகரன்**

# இரத்த தானம் முகாம்

## காஞ்சிபுரம்

கொரானா வைரஸ் நோய் தொற்று பரவல் காலத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்,அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், இந்திய மாணவர் சங்கம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆகிய சங்கங்கள் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் 20.06.2020 அன்று காலை 09-30 மணிக்கு நடைபெற்றது. முகாமில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் வெ.லெனின் மாவட்ட செயலாளர் துரை.மருதன் மாவட்ட இணை செயலாளர் எஸ்.ரஞ்சிட்சிங்



தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் தோழர் எல்.திருமூர்த்தி மற்றும் எம். பாலகிருஷ்ணன் பெண் நிருவாகிகள் எம்.ஆர்.திலகவதி, இ.பேபி, பி.கௌதமி, ஆர்.சௌந்தர்யா சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பி.இதயராஜா மற்றும் மாவட்ட செயலாளர் துரை.மருதன் இரத்ததானம் செய்தனர்.

## செங்கற்பட்டு

15-07-20 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் செங்கற்பட்டு மாவட்டம் மற்றும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் செங்கை- காஞ்சி மாவட்டம் ஆகியோர் இணைந்து ரத்த தான முகாம் செய்யூர் வட்டக் கிளை வில்லிபாக்கம் கிராமத்தில் நடத்தினர்.



இம்முகாமில் 45 தோழர்கள் ரத்த தானம் செய்தனர். இந்நிகழ்வில் பங்கேற்று ரத்த தானம் செய்த அனைத்து தோழர்களுக்கும், நன்கொடை வழங்கி இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

# தொழிலாளர்கள் போராட்டங்களும் – பொதுநல வழக்குகளும்

சமீப காலமாக எந்தத் தொழிலாளர்கள்/ ஊழியர்கள் போராடினாலும் உடனே எவரோ ஒருவர் பொதுநல வழக்கு ஒன்றைப் போடுவதும், வேலை நிறுத்தத்துக்குத் தடை கோருவதும், உயர் நீதிமன்றம் உடனடியாக தொழிற்சங்கங்களைக் கேட்காமலே வேலைநிறுத்தம் தொடர்ந்தால் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எதிர் கொள்ள நேரிடும் என்று கூறுவதும் நிகழ்கிறது.

பணி நிலைமை தொடர்பாகப் பொது நல வழக்கு போட முடியாது என்று உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் கூறியுள்ளது. புதிய தமிழகத்தின் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி, அரசின் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டோருக்கான பின்னடைவுப் பணி இடங்களை நிரப்பாமல், உதவிப் பேராசிரியர்களுக்கான இடங்களை நிரப்பக்கூடாது என்று பொது நல வழக்கு போட்டார். அதை விசாரித்த நீதிபதி முகோபாத்தியாயா தலைமையிலான இரு நீதிபதிகள் அமர்வு, பொதுநல வழக்கைத் தள்ளுபடி செய்தது. பணி நிலைமை தொடர்பாகப் பொதுநல வழக்கு போட முடியாது என்று தீர்ப்பளித்தது. எனவே வேலைநிறுத்தம் போன்ற நேரங்களில் அதை எதிர்கொள்ள பொதுநல வழக்கு என்ற உத்தியைக் கையாள்வதும், உயர் நீதிமன்றம் தொழிற்சங்கங்களைக் கேட்காமல், அதிரடியாகத் தடை உத்தரவு அளிப்பதும் சரியாகாது.

தொழிலாளர்கள் நலிந்த பிரிவினர் என்றும், வேலைநிறுத்தத்தின் மூலம் நிர்வாகத்தை நிர்பந்திக்க அவர்கள் வேலைநிறுத்தம் என்ற ஆயுதத்தை பயன்படுத்தலாம் என்றும் குஜராத் ஸ்டீல் டியூப் வழக்கில் 1980-ல் மறைந்த நீதிபதி கிருஷ்ண ஐயர் வழங்கிய தீர்ப்பு, தொழிலாளர்களின் கூட்டுபேர உரிமையை அங்கீகரிக்கும் தீர்ப்பு. வேலைநிறுத்தம் என்ற போர்வையில் வன்முறையில் ஈடுபடக்கூடாது என்பதை மட்டும் அத்தீர்ப்பில் நிபந்தனையாகக் கூறுகிறார். அரசமைப்புச் சட்டத்தின் பாகம் நான்கின் வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 19-தையும் நீதிபதி கிருஷ்ண ஐயர் தனது தீர்ப்புக்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகிறார். மேலும் அவர் இதுவே சமூக நீதியை வலுப்படுத்தும் என்கிறார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில், தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது, சிம்சன் நிறுவனத்திலிருந்து பொருட்களை எடுத்துச் செல்வதைத் தொழிலாளர்கள் தடுக்கிறார்கள் என்றும் அதற்குத் தடை வழங்கி பொருட்களை எடுத்துப் போக அனுமதித்து உத்தரவிடுமாறு ச்ராம் விலாஸ் சர்வீஸ் எதிர் சிம்சன் கம்பெனி தொழிலாளர்கள் சங்கம் என்ற வழக்கில் (1979ல்) நிர்வாகத்தினர் உயர் நீதிமன்றத்தை அணுகியபோது, நீதிபதி நயினார் சுந்தரம் நிர்வாக வழக்கைத் தள்ளுபடி செய்தார். தொழிலாளர்கள் கூட்டு பேர சக்தியை முறியடிப்பதற்காக நீதிமன்றத்தின் துணையை நிர்வாகம் நாட முடியாது என்று தீர்ப்பளித்தார்.

2007-ல் பாரத் பெட்ரோலியம் வேலைநிறுத்தத்தைத் தடை செய்யக்கோரி, நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிர்வாகம் தாக்கல் செய்த வழக்கு நீதியரசர் து.அரிபரந்தாமன் அவர்கள் நீதிபதியாக இருந்தபோது விசாரணைக்கு வந்தது. நீதியரசர் சந்துரு அவர்கள் வழங்கியத் தீர்ப்பைச் சுட்டிக் காண்பித்து, வேலை நிறுத்தத்திற்கு தடை கொடுக்க மறுத்தார். நிர்வாகம் மேல்முறையீடு செய்து, இரு நீதிபதிகள் அமர்வில் அடுத்த நாளே தடை உத்தரவு பெற்றது. ஆனால், தொழிலாளர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். வழக்கு போட்ட நிர்வாகம் ஒரு கட்டத்தில் தொழிற்சங்கங்களுடன் ஒப்பந்தம் போட்டு, வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. இம்மாதிரி தடை உத்தரவுகளை நடைமுறையில் அமல்படுத்தவும் முடியாது. ஆயிரக்கணக்கில் அல்லது லட்சக்கணக்கில் தொழிலாளர்களை நீதிமன்ற உத்தரவை அவமதித்தார்கள் என்று சிறையில் தள்ளிவிட முடியாது.

தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் ஏற்படும் பிரச்சனைகளில் நிர்வாகம் எந்த சட்டபூர்வமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளலாம். அப்போது அந்த நடவடிக்கை சரியானதா என்பதைப் பரிசீலிக்கும் இடம் நீதிமன்றம் மட்டுமே. எனவே நிர்வாகம் அவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்தை நாடினால், நீதிமன்றம் அந்தக் கோரிக்கையை ஏற்கக் கூடாது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சுமார் 1,76,000 லட்சம் அரசு ஊழியர்களை வேலைநிறுத்தம் செய்ததற்காக வேலை நீக்கம் செய்தார். சிஐடியு சார்பில் தோழர் டி.கே.ரங்கராஜன் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் அனைவரும் வேலைநிறுத்த காலம் மற்றும் பணி நீக்க காலம் சிறைச்சாலையில் இருந்த காலம் அனைத்திற்கும் பணிவரன் முறை செய்து; சம்பளம் பெற்றனர் என்பது வரலாறு.

**- மங்கலபாண்டியன்**

# சத்தமில்லா யுத்தம்



நவீன காலத்து ஊழியர்களின் நோக்கம் இனிமையான வாழ்வு வாழ்வது மட்டுமே. நாற்பது வயதில் வீடு, வாகனம், சேமிப்பு என்று 'செட்டில்' ஆகி விட வேண்டும். எந்தப் பிரச்சினையுமின்றி ஒவ்வொரு நாளும் பளிங்குத் தரையில் வழுக்கிச் செல்லும் வண்டியைப் போல வேகமாக நகர வேண்டும். மகிழ்ச்சி, உற்சாகம், இன்பம், இனிய உரையாடல், சுவையான உணவு, தித்திக்கும் கேளிக்கை என்று புராணங்கள் சித்தரிக்கும் சுவனபதி போல பூலோக வாழ்வு பூமெத்தையாய்ப் பூரிப்பளித்து புல்லரிக்க வைக்க வேண்டும்.

குழாயைத் திறந்தும் நீர் வர மறுத்தால் காற்றுப் போன பலூனாய் இதயம் சுருங்கி இம்சைப்படுகிறார்கள். சட்னியில் ஒரு கல்லைப் பல்லில் நறுக்கெனக் கடிக்க நேர்ந்தால், அவர்களுக்கு நாளே நட்டப்பட்டது போன்ற கட்டம் ஏற்படுகிறது. ஒரு மணி நேரம் மின்வெட்டு நிகழ்ந்தால் ஓராயிரம் முறை அனைத்து அரசுகளும் சபிக்கப்படுகின்றன. வழியில் வாகன நெரிசலால் சற்று தாமதம் ஏற்பட்டால், ரத்தம் கொதிக்கிறது, முகம் சிவக்கிறது. எங்கேனும் யாரேனும் தடித்த வார்த்தையை நம் மீது பிரயோகித்தால், படபடப்பு நாள் முழுவதும் நடுத்தெருவை ஆக்கிரமித்துக் கட்டிய பிள்ளையார் கோயிலைப் போல இடைஞ்சல் தருகிறது.

நம் மனத்தயாரிப்பிலிருந்து சந்திக்கும் சம்பவங்கள் சற்று பிறழ்ந்தால் கசப்பும், விரக்தியும், வருத்தமும், அயர்ச்சியும் விஸ்வரூபம் எடுத்து விசாரிக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் காரணங்கள் ஆழ்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டியவை. இன்று அலுவலகங்கள் பல ஊழியர்களின் இருமல்களைக் கூடக் கணக்கெடுக்கின்றன. நல்ல ஊழியர் என்று நன்னூல் இலக்கணம் போல ஒவ்வொரு அலுவலகத்திலும் சட்டப் புத்தகம் ஒன்று சாம்ராஜ்யம் செய்கிறது. மாதாந்திர அலுவலர்கள் கூட்டத்தில் ஊழியர்கள் விடும் கொட்டாவிகள் கூட புகார்ப் பட்டியலில் இடம் பெறுகின்றன.

வெற்றி மட்டுமே பிரதானம், வழிகளைப் பற்றி விழிகளைக் கசக்க வேண்டியதில்லை என்கிற கசப்பான நடைமுறையில், முன்னேற்றம் வளர்ந்திருக்கிறதா என்று அறுதியிடாமல், வளர்ச்சி வந்திருக்கிறதா என உறுதி செய்வதே அணுகுமுறையாக ஆட்சி செய்கிறது. நல்ல ஊழியர் என்றால் அலுவலகம் சென்று, வெளுத்த உடை கசங்காது அலுவலர் தும்முவதையும் துல்லியமாகக் கவனித்து, விடுமுறை நாட்களில் வெகுசெலவில் வாராந்தர இல்லப்பணிகளை துறந்து திட்டப் பணிகள் செய்து, இருப்பதே தெரியாமல் இருப்பது தாம். என்றிருக்கின்றனர் இது முன்பு நகரமயமாதலில் மட்டும் இருந்தது, இப்போது கிராமங்களிலும் முளைத்திருக்கும் அலுவலகங்களில் விண்டவர் கண்ட வெற்றிக் கதையாக விரிந்திருக்கிறது.

பிடித்த பொம்மையாய் நடத்தை இருப்பவனே நல்ல அரசு ஊழியன் இல்லையெனில் எந்த நேரத்திலும் திறந்த வாசல் வழியாகத் திருப்பி அனுப்பப்படும் அபாயம். எப்படியாவது எதிர்பார்த்த படிப்பு, கை நிறைய ஊதியம், வீடு நிறைய பொருள், கண் நிறைந்த மனைவி என்றெல்லாம் பிள்ளைகள் பற்றி எல்லைகளற்ற எண்ணங்களைத் தாங்கும் இவர்கள் மனம் நிறைந்த வாழ்க்கை அமைய வேண்டும் என்பதைப் பற்றி மாத்திரம் சிந்திக்காமல் இருப்பதற்கு சித்தம் சிந்துவதுதான் காரணம் இவையெல்லாம் இருந்தால் மனமகிழ்ச்சியும் கூடும் என்கிற இவர்கள் ஊகம்

வாழ்வை அறிவியல் சமன்பாடாகவும், கணிதக் கேரட் பாடாகவுமே பார்க்கும் குறுகிய பார்வையின் வெளிப்பாடு மட்டுமே.

சண்டை போடாமல், எதிர்ப்புகளைச் சந்திக்காமல், வெயிவீலைச் சந்திக்காமல் குடைக்கடியில் வளர்த்திட்ட நாற்றாக வளரும் இவர்கள் இளமைப்பருவத்தை பெற்றோரின் சுண்டுவிரலைப் பிடித்துக் கொண்டே அடைவதால் அவர்கள் இன்னமும் கருப்பையில் இருக்கும் கதகதப்பையே எதிர்பார்க்கிறார்கள். எங்கேனும் சின்ன சூறாவளி ஏற்பட்டால் அவர்களுக்குத் தீரா வலி ஏற்பட்டு திக்கற்று நிற்கிறார்கள். இவர்கள் பாதுகாக்கப்பட்ட ஊழியர் நம் நாட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அரிது, பாதுகாக்கப்பட்ட ஊழியர் அதிகம்.

எந்த எதிர்ப்பையும் சந்திக்காமல், யாரிடமும் சண்டை போட்ட அனுபவம் ஏற்படாமல், தங்களுக்குப் பதிலாக தந்தையரை அவமானப்பட வைத்து வளர்ந்த இளைய தலைமுறை சின்ன சிராய்ப்புகளுக்குக் கூட சிறுத்து விடுகிறார்கள். சிறுத்தைகளாக சிலிர்த்து நிற்க வேண்டியவர்கள், நத்தைகளாகச் சுருண்டுவிடுகிறார்கள். பாதுகாப்பு ஓடு இருக்கும் எந்த உயிரினமும் வேகமாக விரைய முடியாது என்பதையே இயற்கை நமக்குக் கற்றுத் தருகிறது.

போட்டியும், போர்க்குணமும், உள்ளுக்குள் ஊற்றெடுக்கும் நியாயமான கோபமும் கொண்டவர்கள் அவலங்களை அழிக்க சத்தமில்லாமல் யுத்தம் ஒன்றை சகல நேரமும் நடத்துகிறார்கள். அவர்கள் நடத்தும் போர்களாலேயே மற்றவர்கள் மன நிம்மதியுடன் வாழ முடிகிறது. யாரோ பனியில், குளிரில் துப்பாக்கியை ஏந்தி துணிச்சலோடு இரவெல்லாம் விழித்த வண்ணம் நம் எல்லைகளைப் பாதுகாப்பதால் தான் நாம் கதவைத் தாழ்ப்பாள் போடுவதையே மாபெரும் கடமையாக எண்ணிச் செய்து குறட்டைவிட்டுத் தூங்க முடிகிறது.

'போர்கள் அநாவசியமானவை' என்பவர்கள் கூட 'போர்க்குணம் அவசியம்' என்றதற்கு மகாத்மாவே மகத்தான சாட்சி. எண்ணற்ற போராட்டங்கள் மனித நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்தே நிகழ்ந்திருக்கின்றன. வெற்றியைப் பெற்றவனே வியாபித்திருக்கிறான். அவன் தன்னம்பிக்கையை, கொள்கையை, அறிவை மற்றவர்கள் மீது திணித்தான். அவனைத் தோற்றவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

வரலாறு கண்ட போராட்டங்களிலிருந்தும், அவற்றில் கடைப்பிடிக்கப் பட்ட உத்திகளிலிருந்தும் இன்றைய வாழ்க்கையை நாம் கற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டியவை எவை என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன், உங்களோடு பயணப்படப் போகிறேன். உங்கள் ஆயுதங்களை சாணை பிடித்துத் தயாராக இருங்கள். அடுத்த போராட்ட களம் காண...

- **கோ.பழனியம்மாள்**

# தருமபுரியில் நிவாரண உதவிகள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமாக அரசி மற்றும் மளிகைபொருட்கள் காய் தொகுப்பு அரூர் ஊராட்சி ஒன்றியம், தீர்த்தமலை ஊராட்சி பொய்யப்பட்டி, கட்டரசம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டது.

அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரூர் சட்டமன்ற உறுப்பினர். வே.சம்பத்குமார்,அரூர் சார்ஆட்சியர் மதிப்பிற்குரிய பிரதாப் இ.ஆ.ப, அரசு ஊழியர் சங்க மாநில துணை தலைவர் ஜி.பழனியம்மாள், மாவட்ட செயலாளர் ஏ.சேகர், மாவட்ட துணை தலைவர்கள் அண்ணாகுபேரன், பி.எஸ்.இளவேனில், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் சி.காவேரி அரசு ஊழியர் சங்க வட்ட செயலாளர் சி.அழகிரி, பேராசிரியர் முனைவர் சிவப்பிரகாசம் தமிழ்நாடு அரசு கூட்டுறவு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகி விஜியகுமார் ஆகியோர் நிவாரண பொருட்களின் தொகுப்பை வழங்கினர். பொய்யப்பட்டியில் 114 நபர்களுக்கும், கட்டரசம்பட்டியில் 35 நபர்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக நான்காம் கட்டமாக 1,டன் அரிசி மற்றும் மளிகைபொருட்கள், காய்கறிகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை அரூர் வட்டகிளை தோழர்கள் மற்றும் பொய்யப்பட்டி இளைஞர்கள் மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.

நிவரணம் வழங்க நிதி உதவியளித்த தோழர்கள் அனைவருக்கும் தருமபுரி மாவட்ட மையத்தின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ❖

# சுரண்டலின் மறுபக்கம்



இந்தியாவில் கொரோனா தொற்றையே தோற்கடித்த நோய்தொற்று ஒன்று உண்டு என்றால் அது : "ஸ்பானிஷ் புளு" முதல் உலகப்போரின் முடிவில் 1917ம் ஆண்டின் இறுதி கட்டத்தில் ஐரோப்பிய நாடுகளை உலுக்கிய வைரஸ் $H_1N_1$ என்ற ஸ்பானிஷ் புளு வைரஸ் உலகப்போர் நடந்த காலத்தில் இந்த தொற்று பரவியதால் போரில் ஈடுபட்டு இருந்த வீரர்களின் மனஉறுதி சிதைந்து விடக்கூடாது என்பதற்காக அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஸ்யா, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகள் பத்திரிக்கை சுதந்திரத்தை அவர்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். ஸ்பெயின் நாட்டில் மட்டுமே செய்திகளை வெளியிட பத்திரிக்கை மற்றும் ஊடகங்களுக்கு சுதந்திரம் இருந்தது. இதனால் அங்கு புளு பற்றிய செய்திகள் பரபரப்பாக வெளிவந்தன. அப்போது ஸ்பெயினில் ஆட்சியில் இருந்த மன்னர் 13-ம் அல்போன்சாவுக்கும் ஸ்பானிஷ் புளு பாதித்தது. அதனால் ஸ்பெயின் அதிகமாக பாதித்தது போன்ற மாயை அப்போது உருவாகி ஸ்பானிஷ் புளு என்ற பெயர் வந்தது. புளு இளைஞர்களையே அதிகமாக பாதித்தது.

உலகப்போரால் உயிரிழப்புகள் ஒரு பக்கமும், வைரஸால் உயிரிழப்புகள் ஒரு பக்கமும் ஐரோப்பிய நாடுகள் அதிருப்தியில் ஆழ்ந்தன. அன்று உலகமெல்லாம் இருந்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்களை புளு பாதித்தது. ஐந்து கோடிப்பேர் இறந்தனர். அப்போது மருத்துவ வசதிகள் வந்திராத காலகட்டம் என்பதால் உலகமே புளுவை கண்டு நடுங்கியது. இந்தியாவிலும் ஸ்பானிஷ் புளு தன்கோர முகத்தை காட்டியது.

முதல் உலகப்போர் முடிந்து நாடு திரும்பி படைவீரர்கள் மூலமாகவும் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவின் பெரிய நகரங்களான மும்மை, கொல்கத்தா, டெல்லி, சென்னை துறைமுகங்களில் கப்பல்களில் வந்திறங்கிவர்கள் மூலம் தான் இது முதலில் இந்தியாவில் பரவத் தொடங்கியது. கொத்து கொத்தாக பரவியது. கொத்து கொத்தாக உயிர்களை பலிவாங்கியது. உலகளவிலான பலியில் 5-ல் 1 பங்கு இந்தியர் என சொல்லப்படுகிறது. புளுவில் இருந்து தேசபிதா மகாத்மா காந்தி மீண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. சூரியகாந்த் திரிபாதி என்ற புலவர் ஸ்பானிஷ் புளு இந்தியாவில் ஏற்படுத்திய பாதிப்பை "பிணங்களை எரிப்பதற்கு மரக்கட்டைகள் இல்லை" என வர்ணிக்கிறார்.

இந்திய விடுதலை போராட்டத்தில் மிகப்பெரிய பின்னடைவு ஏற்பட்டது. இந்தியர்களுக்கு ஐரோப்பிய ஏகாதி பத்தியத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஸ்பானிஷ் புளுவானது சுழற்சி முறையில் இன்றுவரை வந்து கொண்டே இருக்கிறது. இதற்கு நிரந்தரமாக மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

இக்காலக்கட்டத்தில் ஆங்கிலேயர்களால் இந்தியாவிலுள்ள இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டது. மிஞ்சியது பொதுத்துறை நிறுவனங்கள்.

சீனாவில் வூகான் மாகானத்தில் ஆரம்பித்த கொரோனா ஐரோப்பிய நாடுகளை ஆட்கொண்டு இந்தியாவை மூன்றாவது இடத்தில் தக்கவைத்துள்ளது. இதுவரை இந்தியாவில் ஒட்டுமொத்த மாக 6.99 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 19707 பேர் இறந்துள்ளனர். தடுப்பு மருந்துகள் இல்லை.

20ம் நூற்றாண்டில் பரவிய ஸ்பானிஷ் புளுவால் ஆங்கிலேயர்களால் இந்தியாவிலுள்ள இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டது. மிஞ்சியது பொதுத்துறை நிறுவனங்கள்.

21ம் நூற்றாண்டில் பரவிய கொரோனாவால் இந்தியர்களாலேயே இயற்கை வளங்களுடன் பொதுத்துறை நிறுவனங்களும் சுரண்டப்படுகிறது. நூற்றாண்டு கடந்தும் இந்தியா சுரண்டலின் மறுபக்கமாகவே காட்சியளிக்கிறது.

- **கோ.பழனியம்மாள்**

## பெண்களின் உரிமைக்காக உலக அளவில் நடத்தப்பட்ட முதல் மாநாடு ஜீலை 19



*1848-* பெண்களின் சமுக மத கட்டுப்பாட்டுகள் மற்றும் உரிமைகள் பற்றி விவாதிப்பதற்கான ஒரு மாநாடு என்ற அறிவிப்புடன் 1848 ஜூலை 19, 20 ஆகிய இரு நாட்களும் அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள செனகாஃபால்ஸ் என்ற இடத்தில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது லுக்ரிடியா மோட,; எலிசபெத் ஸ்டாண்டன ஆகிய இரு பெண்களால் நடத்தப்பட்ட இந்த மாநாடுதான் உலகிலேயே முதன்முதலாக பெண்களின் உரிமைக்காக நடத்தப்பட்ட மாநாடு ஆகும். அடிமை முறை எதிர்ப்பாளர்களான இவ்விருவரும் 1840-ல் லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது பெண்கள் என்ற காரணத்தால் அனுமதிக்கப்படாததே இவர்களை பெண்கள் உரிமைக்கான மாநாட்டை நடத்தச் செய்தது. முதல்நாள் மாநாடு பெண்கள் மட்டுமே பங்கேற்றனர். இதில் 200 பெண்கள் பங்கேற்றனர். இரண்டாம் நாள் மாநாட்டில் ஆப்பிரிக்க அமெரிக்கரான அடிமை முறை எதிர்ப்பாளர் ஃபிரடரிக் டக்ளஸ் உள்ளிட்ட 40 ஆண்கள் கலந்துகொண்டனர். மாநாட்டில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் Declaration of Sentiments Grievances என்ற ஆவணமும் வெளியிடப்பட்டது. இது அமெரிக்காவில் பெண்களுக்கு இழைக்கப்பட்டுக்கொண்டிருந்த அநீதிகளைப் பற்றி விளக்கியதோடு அமெரிக்கப் பெண்கள் ஒன்று திரண்டு போராடவும் அறைகூவல் விடுத்தது இந்த மாநாடு. உந்துதலில் இரண்டு வாரங்களில் நியூயார்க்கின் ரோச்செஸ்டர் என்ற இடத்தில் இதைவிடப் பெரிய மாநாடு ஒன்று மகளிர் உரிமைகளுக்காக நடத்தப்பட்டது. 1850 லிருந்து ஆண்டுதோறும் பெண்கள் உரிமை மாநாடு மாசாசூசெட்சின் வொர்செஸ்டர் என்ற இடத்தில் நடைபெறுவது வழக்கமாகியது. நீண்ட நெடிய போராட்டங்களுக்குப்பின் 1920ல் அமெரிக்கப் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் பத்தொன்பதாவது சட்டத் திருத்தம் நிறைவேறினாலும் அன்று கையெழுத்திட்ட 100 பெண்களில் சார்லோட் உட்வர்ட் என்ற ஒரே பெண்தான் உயிருடன் இருந்தார். அவரும் உடல்நிலை காரணமாக வாக்களிக்க இயலவில்லை.

## ஆண்களுக்கு இணையாக பெண்களும் போர் படைகளில் தங்களின் பங்கை செலுத்த முடியும் என நிருபித்த முதல் உலகப் போர். ஜீலை 28

*1914* - செர்பியாவின் மீது ஆஸ்திரியா-வறங்கேரிப் பேரரசு போர் தொடுத்தையடுத்து முதல் உலகப்போர் தொடங்கியது. இப்பேரரசின் இளவரசரான ஃப்ரான்ஸ் பேர்டினாண்ட் ஜூன் 28 அன்று மனைவியுடன் காரில் சென்றபோது செர்பிய நாட்டைச் சேர்ந்தவரால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து. நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளைச் செர்பியா மீது வலியுறுத்தியதுடன் அவற்றை நிறைவேற்றவில்லை என்று போரையும் தொடுத்தது ஆஸ்திரிய-ஹங்கேரி பேரரசு இதனுடன் செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஒப்பந்தங்களால் ஜெர்மெனியும் போரில் குதித்தது உண்மையில் ஐரோப்பாவின் அப்போதைய வல்லரசு நாடுகளிடையே நிலவிய அதிகாரப் போட்டியே இப்போருக்கான அடிப்படைக் காரணமாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டில் பிஸ்மார்க்கால் ஜெர்மெனி ஒருங்கிணைக்கப்பட்ட போது ஃபிரான்ஸ் சில பகுதிகளை இழக்க நேர்ந்ததும் ஜெர்மெனிக்கும் இங்கிலாந்துக்குமிடையே நிலவிய பொருளாதார ராணுவ குடியேற்றம் போட்டிகள் ஆகியவையும் தூண்டுகோல்களாக அமைந்தன. ஐரோப்பாவின் மையப் பகுதியைச் சேர்ந்த ஆஸ்திரிய-ஹங்கேரி ஜெர்மெனி இத்தாலி உள்ளிட்ட நாடுகள் மைய நாடுகள் என்ற பெயரில் ஒரணியாகவும் இங்கிலாந்து ரஷ்யா ஜப்பான் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் நேச நாடுகள் என்ற பெயரில் எதிரணியிலும் இருந்த இந்தப் போரின் பெரும்பகுதி ஐரோப்பாவிலேயே நடைபெற்றது. இயந்திரத் துப்பாக்கிகள் கனரக பீரங்கிகள் நீர்மூழ்கிகள் விமானங்கள் என்று பல புதிய தொழில்நுட்ப ஆயுதங்கள் இப்போரில் பயன்படுத்தப்பட்டன. இப்போரினால் ஏற்பட்ட பாதிப்புகளில் உதவுவதற்காக இரத்த வங்கி என்ற அமைப்பு நடைமுறைக்கு வந்ததுடன் ப்ளாஸ்டிக் சர்ஜரியும் வளர்ச்சியடைந்தது. பல நாடுகளையும் சேர்ந்த சுமார் ஆறரைக்கோடி வீரர்கள் பங்கேற்ற இப்போரில் சுமார் ஒரு கோடி வீரர்கள் பலியாயினர் பெண்கள் படைகளில் அனுமதிக்கப்படாவிட்டாலும் ஆயுதத் தயாரிப்பு உட்பட பல பணிகளிலும் ஈடுபட்டு ஆண்களுக்கு இணையாகப் பணிபுரிய முடியும் என்ற நிருபிக்க இப்போர் உதவியது. 1918 நவம்பர் 11 அன்று போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டு. 1919 ஜூன் 28 அன்று முறைப்படி முடிவுக்கு வந்த இப்போரே ஆஸ்திரிய-ஹங்கேரி ரஷ்யா ஒட்டோமான் ஆகிய பேரரசுகள் சிதைவுற்றது. துண்டுகளாகவும் காரணமாகியது.

- **மு.பாஸ்கரன்**

# ஆகாயத்திலிருந்து குதித்தவர்களா?

வானம் நீல நிறமானது. உடலில் ஓடும் குருதி சிவப்பு நிறமானது. நம் தமிழ் மண்ணின் பெரும்பாலான உழைக்கும் மக்களின் நிறம் கருப்பானது. இந்நாட்டு மக்களை இயற்கை பேரிடர் மற்றும் தொற்று நோய் பேரிடர் காலத்தில் காத்து நிற்கும் உழைக்கும் வர்க்கத்தின் ஒரு பகுதியான அரசு ஊழியர்களின் உழைப்பும் அவர்தம் உணர்வுகளும் உன்னதமானது.

போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும் என யாருடைய வசைபாடல்களிலும் மனம் கலங்காது, மக்கள் பணியே மாதவப்பணி அதற்கு உன்னை அர்ப்பணி என்ற உணர்வோடு, ஒக்கிப்புயல், கஜாப்புயல், சென்னை வெள்ளம் போன்ற அனைத்து இயற்கை பேரிடர் காலங்களிலும் தற்போது 2020ஆம் ஆண்டில் கரோனா தொற்று நோய் தடுப்பு பணியிலும் சிறிதளவேனும் அயர்ச்சிக்கு இடமளிக்காமல் பணியாற்றி வருகின்றனர். .

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில அளவைத்துறை, கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் என வட்டாட்சியர் முதல் வருவாய் கிராம உதவியாளர் வரை அனைவரும் கரோனா தொற்று நோய் தடுப்பு பணியில் 24X7 என்ற நிலையில் வாரத்தின் ஏழு நாட்களும், ஒரு நாளின் 24 மணி நேரமும் கண் துஞ்சாது, ஆம் பகலில் அலுவலகம், கிராம பகுதிகளை கண்காணித்தல் துவங்கி இரவு நேரத்தில் மாவட்ட எல்லை சோதனை சாவடிகள் வரை நீள்கிறது அரசு ஊழியர்களின் மக்கள் நலப்பணி.

ஆபத்து காலங்களில் அரசாங்கம் என்னும் சக்கரம் தானாகவா சுழன்றது? அரசு ஊழியர்கள் தங்கள் உழைப்பினால் அச்சக்கரத்தை சுழலச்செய்து, பொது மக்களிடத்தில் தொற்று நோய் பரவாமல் அவர்களின் உடல் நலம் காக்கவும், அவர்களின் அத்தியாவசியம் தேவைகள் அறிந்து அரசின் நிவாரணங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும் முக்கிய பங்காற்றி வருகின்றனர். பல்லாயிரம் குடும்பங்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் விதமாக ஹோமியோபதி மருந்தான ஆர்செனிக் ஆல்பம் என்ற மருந்தினை அனைவருக்கும் வழங்கியுள்ளனர்.

இப்பிரபஞ்சம் யாருக்காகவும், தன் இயக்கத்தை ஒரு போதும் நிறுத்திக் கொள்வதில்லை. இப்பிரபஞ்சத்தின் ஓட்டத்துடன் மக்கள் நலப் பணிக்காக வீறுநடை போடுபவர்கள் வரலாற்றில் வெற்றி காண்கிறார்கள்.

கரோனா நோய் தொற்றிலிருந்து இவ்வுலக மக்கள் விடுதலை பெற அரசு ஊழியர்களின் அயராத உழைப்பும், இடைவிடாத முயற்சியும் மக்கள் மீது கொண்ட பற்றினால் தொடர்ந்து வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

கொடுமையான தொற்று நோய் காலத்திலும் தனி ஒருவனாக களத்தில் இறங்கி மக்கள் நலத்திற்காக களப்பணியாற்றுபவர்கள் நமது அரசு ஊழியர்கள்.

எந்த விதமான எரிச்சலுக்கும் இடம் தராமல், இரவு வேளைகளில் அலைபேசி ஒலியெழுப்பி தூக்கம் கலைகிறதோ என்று எண்ணாமல், ஏன் பல இரவுகள் தூக்கத்திற்கே இடம் கொடாமல், மாவட்ட எல்லையில் சோதனை சாவடிகளில் கிராமப்புற தெய்வமாக அய்யனார் போல், கட்டேறும் பெருமாள் போல், சுடலைமாடன் போல் தன் மக்களை கரோனா நோய் தொற்றிலிருந்து பாதுகாக்க பணியாற்றி வருபவர்கள் நம் அரசு ஊழியர்கள்.

ஏழை - பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரையும் அரவணைத்து காத்திட பணிபுரியும் சமதர்ம வாதிகள் நம் அரசு ஊழியர்கள். தன் பாதுகாப்பை பற்றி கவலைப்படாமல்,

அலுவலகத்திலும், வீடு வீணாய் சென்று விழிப்புணர்வு செய்தும், தொற்று நோய் பாதித்த மக்களை பத்திரமாய் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தல், வெளி மாநில தொழிலாளர்களுக்கு உண்ண உணவு வழங்கி, பாதுகாப்பாய் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தது, வெளி மாநிலம் மற்றும் மாவட்டங்களிலிருந்து வரும் நம் மக்களை சகோதரர்கள் போல் பேணிக்காத்து, அவர்கள் குடும்பத்துடன் சொந்த ஊர்களில் கொண்டு சேர்த்தல், மாவட்ட எல்லை சோதனை சாவடிகளில் வெளி இடங்களில் இருந்து வந்த பயணிகளின் அத்தனை விபரங்களையும் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், வேக வேகமாக பதிவுசெய்து, பாதிக்கப்பட்டோரை தனிமைப்படுத்தி உரிய சிகிச்சை வழங்க முன்னேற்பாடு செய்தது என தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் அரசு ஊழியர்கள் என அத்தனை பணிகளையும் மனம் கோணாமல் இன்றளவும் தமிழகம் முழுவதும் செய்து வருகின்றனர் நமது அரசு ஊழியர்கள்.

கடவுள்கள் கூட தன் கோவில் கதவுகளை சாத்திக்கொண்ட காலத்தில் நம் மக்களுக்காய் உழைப்பவர்கள் நமது தோழர்களான அரசு ஊழியர்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆண் ஊழியர்கள் மட்டுமல்ல, பெண் ஊழியர்களும் இரவு பகல் பாராமல் அனைத்து நோய் தடுப்பு பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆம் இன்று அரசு ஊழியர்களாக பாதிக்கு மேல் பெண் தோழர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு ஊழியர்கள், ஆம் மக்களின் ஊழியர்கள், யார் இவர்கள்?

எங்கிருந்து வந்தார்கள்?

" ஆகாயத்திலிருந்து குதித்தவர்களா? "

இல்லை. நம் சக மனிதர்கள் அரசு ஊழியர்கள். நம் சகோதரர்கள், நம் நண்பர்கள், நம்ம ஊர்க்காரர்கள், நம் அரசு ஊழியர்கள்.

இத்தகைய தொற்று நோய் காலத்தில், மக்கள் பணி செய்யும்போது, பாதிப்பு ஏற்பட்டால், நாம் நம் குடும்பத்திடமிருந்து, தனிமைப்படுத்தப்படுவோம், என்று நன்கு தெரிந்திருந்தும், எதற்கும் அஞ்சாமல், தன் சொந்த குடும்பத்தைக் கூட கவனிக்க நேரமின்றி, தன் குழந்தைகளைக் கூட பார்ப்பதை தவிர்த்து, நமது நாட்டின், நமது மாநிலத்தின், நமது மாவட்டத்தின், நமது ஊரில் உள்ள சொந்த மக்களின் நலன் காக்க, ஆண், பெண் என அத்தனை அரசு ஊழியர்களும் முன்னணியில் நின்றதை வேறு எந்த செயல்பாடுகளோடும் ஒப்பிட முடியாத அளவுக்கு அத்தனையையும் விஞ்சி நிற்கிறது.

அனைத்து மக்களின் நலன் காப்பதே உழைக்கும் வர்க்கத்தின் ஜனநாயகம் ஆகும்.

ஆம் அரசு ஊழியர்கள் ஆகாயத்திலிருந்து குதித்து வந்த சூரிய கதிர்கள். இந்த செம்மையான கதிர்கள் தீக்கதிராக மாறி பணியாற்றி, இந்த தொற்று நோயை விரட்டியடிக்கும் என்பது உறுதி.

"யாதுமாகி நின்றார்கள் அரசு ஊழியர்கள்".

கடவுளைக் கண்ணால் கண்டவர் இல்லை. அன்றும், இன்றும், என்றும் நம் சக மனிதர்களாம் அரசு ஊழியர்களின் அறப்பணியை மக்கள் அனைவரும் கண்கூடாக பார்த்து வருகின்றனர்.

" ஒருவர் தனக்காக மட்டும் வேலை செய்தால், அவர் ஒரு பெரிய படிப்பாளி என்றோ, ஒரு சிறந்த விஞ்ஞானி என்றோ, ஒரு சிறந்த கவிஞர் என்றோ பெரும் புகழ் மிக்கவராக ஆகலாம். ஆனால் மக்களுக்காக, நம் சொந்த மக்களுக்காக உழைக்கும் போது மட்டுமே, ஒருவர் குற்றமற்ற, முழுமையான, உண்மையான மனிதன் ஆகிறார் என்றார் உழைக்கும் மக்களின் உற்ற நண்பன் கார்ல் மார்க்ஸ்".

தனது மகிழ்ச்சியை தன் ஊர் மக்களுக்கான மகிழ்ச்சியில் பார்க்கும் தன்மைதான், மனிதத்தன்மை.

இந்த மனிதத்தன்மை யின் மறுபெயர்தான் அரசு ஊழியர்கள் என்பது, இந்த கரோனா தொற்று நோய் காலம் அனைவருக்கும் சொல்லும் உண்மை.

- **சுதேசி தோழன்**

---

# மொத்தமாய் எதிர்ப்போம்...!

இன்றைய தேவை எவையென நோக்கி
இன்றைய ஆட்சியர்? அவற்றை நீக்கி
பாடப் புத்தகம் பொலிவிழக்கச் செய்தவர்
கேட்டை இழைக்கும் சங்கிகள் ஆள்வோர்

ஜனநாயக விரோதம் புரிவதால் நீக்கினர்
ஜனங்களுக் கான ஜனநாயகப் பாடம்
மதவெறி ஆள்வோர் நிகழ்ச்சி நிரலுக்கு
எதிர்நிலை மதச்சார் பின்மையை நீக்கினர்

குடியுரிமை திருத்தச் சட்டம் மூலம்
குடியுரிமை எளியோர்க்கு மறுக்கும் கோலம்
குடியுரிமை பாடத்தை முற்றாய் நீக்கினர்
குடிகளுக் கெதிரான கெடுமதி ஆட்சியர்

ஒரேநாடு ஒரேமதம் ஒரேமொழி ஒரேபண்பாடு
ஒரேசட்டம் மூலமே சாத்தியம் கண்டு
அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு வேட்டு
அதனால் பாடத் திட்டத்தில் விரட்டு

பன்முகத் தன்மை இந்திய இமயம்
பன்முகம் விரும்பா நாடாள்வோர் இதயம்
தன்முகம் பாடம் கோரமுகம் நோக்கி
வன்முகம் காட்டினர் பன்முகம் நீக்கி

பசுமரத் தாணியாய் மனதில் பதிய
இளமனம் தன்னில் நஞ்சைப் புதிய
மத்திய அரசின் பாடத் திட்டம்
மொத்தமாய் எதிர்ப்போம் அடக்கு வோம் கொட்டம்.

- **பெரணமல்லூர் சேகரன்**

# பலமான பொது சுகாதாரத் துறையும் பலமிழந்த கட்டமைப்பு வசதியும்

### நாடடங்கு உத்தரவு

நாட்டில் எங்கேனும் பிரச்சனை, கலாட்டா, கோஷ்டி மோதல், கலவரம் என்றால் 144 தடை உத்தரவு போடுவார்கள். அதன்படி ஒரு இடத்தில் 4 பேருக்கு மேல் கூடி நிற்க கூடாது, கும்பலாக சுற்றக் கூடாது, ஆயுதங்கள் கொண்டு செல்லக் கூடாது என்று பல தடைகள் காவல் துறையால் போடப்படும். காரணம் அப்பகுதியில் ஏதேனும் கலவரம் ஏற்பட்டு அதனால் உயிரிழப்பு ஏற்படுவதை தவிர்க்கவே இந்த 144 தடைச் சட்டம் போட்டு அப்பகுதியை 'ஊர் அடங்கும்'படி 'ஊரடங்கு' போடுவார்கள். ஆனால் இன்று இந்த உலகத்தையே புரட்டிப் போட்டு எல்லோரையும் வீட்டை விட்டு வெளியே வரவிடாமல் அச்சுறுத்தி அனைவரையும் வீட்டிற்குள் அடைத்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் உலகம் முழுவதும் 144 தடை உத்தரவு அதாவது 'நாடடங்கு உத்தரவு' போட்டுள்ளது.

### மோசமான பொது சுகாதாரம்

கொரோனா பாதிப்பால் நாடுகள் தனிமைப்படுத்த வேண்டும், அனைவரையும் பரிசோதனை செய்ய வேண்டும், இந்நோய் தொற்றின் ஆரம்ப தடத்தை கண்டுபிடித்து அனைவருக்கும் உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் சொல்கிறது. இதை உலகில் உள்ள நாடுகள் கறாராக கடைபிடித்து வருவதால் இந்நோய் தொற்றை கட்டுக்குள் வைத்திருக்க முடிகிறது. இதை அலட்சியம் செய்த அமெரிக்கா, பிரேசில், இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின் போன்ற பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகள் என்று சொல்லிக் கொள்ளும் நாடுகளில் உயிரிழந்த மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதே நிதர்சனமான உண்மை.

### சுகாதாரத்திற்கு குறைவான நிதி ஒதுக்கீடு

கோவிட்-19 நோய்த் தொற்று குறித்து உலக சுகாதார நிறுவனம் கூறிய கருத்துகளை இந்திய அரசாங்கம் கடைபிடிப்பதாக தெரியவில்லை. இதற்கு காரணம் இந்தியாவில் உள்ள மோசமான பொது சுகாதார அமைப்பு முறையே. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதத்திற்கும் மிகக் குறைவான தொகையே மக்களின் சுகாதாரத்திற்காக ஒதுக்கி செலவிடப்படுகிறது என்பதே நிதர்சனமான உண்மை. இந்தியாவின் சுகாதார அமைப்பு செய்யும் சேவைகளின் நிலையை பார்த்தால் கலக்கத்தை ஏற்படுத்துகிறது.

கோவிட்-19ஆல் பாதிக்கப்படுவோரில் குறைந்தபட்சம் 10% மக்களை தீவிர சிகிச்சைப் பிரிவில் வெண்டிலேட்டரில் வைக்க வேண்டும். ஆனால் வெண்டிலேட்டர்களின் பற்றாக்குறை, முழுமையான வசதிகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு பற்றாக்குறை ஆகியவை இந்த நேரத்தில் இந்தியாவில் பெரிய சவாலாக இருக்கிறது.

### முன்னெச்சரிக்கை நடவடிக்கை

நிஃபா (2001-2007 மற்றும் 2018), ஏவியன் இன்ஃபுளூயன்ஸா (2006), சிக்குன்குனியா (2006), பெரும் தொற்று இன்ஃபுளூயன்சா (2009), எபோலா (2013), ஜிகா (2016) என்று இந்தியா இதுபோன்ற பல சவால்களை ஏற்கனவே சந்தித்துள்ளது. 130 கோடி மக்கள் தொகையை கொண்ட இந்தியாவில் வெறும் 25,778 அரசு மருத்துவமனைகளும் 7,13,986 படுக்கைகளும் மட்டுமே இருக்கிறது. பஞ்ச பூதங்கள் என்று சொல்லப்படும் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் போன்ற இயற்கை பேரிடர்களை நாம் சமாளிப்பது கடினம்தான். ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவற்றிலிருந்து பொதுமக்களை தற்காத்துக் கொள்ள முடியும். பெருகியுள்ள விஞ்ஞான வளர்ச்சியில் இதனை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் வசதி தற்போது உள்ளது. தொற்றுநோய்கள், இயற்கை சீற்றங்களை சமாளிப்பதற்கான நிதி ஒதுக்கீடு இந்தியாவில் எந்த ஆண்டிலும் 100 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டதில்லை.

## பாதுகாப்பற்ற ஊழியர்கள்

கொள்ளை நோய் போன்ற பேரிடர் காலங்களில் மருத்துவர்கள், பொது சுகாதாரத் துறை ஊழியர்கள் குறிப்பாக கிராம சுகாதார செவிலியர்கள், ஆய்வக நுட்பனர்கள் மற்றும் பிற துறைவாரி ஊழியர்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின்றனர். குடும்பத்தை மறந்து, பொருளாதாரத்தை இழந்து தங்கள் உயிரைப் பற்றி கவலைப்படாமல் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று பணியாற்றி வரும் இதுபோன்ற ஊழியர்களின் உயிருக்கு பாதுகாப்பற்ற சூழலே நிலவுகிறது. இதனைக் களைந்து மக்கள் தொண்டாற்றும் அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குகூட தமிழக அரசு முன்வர தயாராக இல்லை.

## தனியாரிடம் சுகாதாரம்

பொது மக்களுக்கு பரவும் நோய்களில் சுமார் 69.47 சதவீதத்தில் 57.88 சதவீதம் நிமோனியா மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக இறக்கின்றனர் என்று 2019 தேசிய சுகாதார அறிக்கை கூறுகிறது. ஆனால், அரசு இதில் கவனம் செலுத்தியதாக தெரியவில்லை. இந்திய அரசோ பொது சுகாதாரத் துறையை தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுக்கும் வேலையை மட்டுமே செய்து வருகிறது. அமெரிக்காவில் அரசு மருத்துவமனை இல்லாததால் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு குறைந்தபட்சம் கொரோனா தொற்று தாக்கியுள்ளதா என்பதை கண்டுபிடிப்பதற்கே 3 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. தனியாரிடம் பொது சுகாதாரம் இருப்பதால் இதுவரை அந்நாட்டில் 23 லட்சம் பேர் பாதிக்கப்பட்டும், அதில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் பத்திரிகை செய்திகள் வெளிவருகின்றன.

பொது முடக்கத்தால் பொருளாதாரம் உள்ள மக்கள் தேவைக்கு அதிகமாக பொருட்களை வாங்கிக் குவித்து குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்துக் கொண்டனர். ஆனால் இதுபோன்ற எந்த வசதியுமில்லாத சாதாரண ஏழை, எளிய மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் அவர்கள் படும் வேதனைக்கு அளவே இல்லை.

பொது முடக்கத்தின்போது முகக்கவசம் அணிதல், சானிடைசர் பயன்படுத்துதல் போன்றவற்றை தீவிரமாக கடைப்பிடிக்கும்படி அரசு வலியுறுத்துகிறது. ஆரம்பத்தில் ஒருசில தொண்டு நிறுவனங்கள் முகக்கவசத்தை இலவசமாக கொடுத்தன. பின்னர் இவை ரூ. 10 என விற்கப்பட்டது. தற்போது அதன் விலை பல மடங்கு



உயர்ந்திருக்கிறது. உயிர் வாழ சாப்பிடுவதற்கே வழியில்லாத ஏழை, எளிய மக்கள் இதனை வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இக்காலத்தில் முகக்கவசம், சானிடைசர் போன்றவற்றை அரசே இலவசமாக கொடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

## உயிர் காக்கும் மருத்துவர்கள்

பொது சுகாதாரம் சிறப்பாக உள்ள நாடுகளில் ஒன்றான இந்தியாவில் கோவிட்-19 தாக்குதல் உள்ள இந்தக் காலகட்டத்தில், ஏழை எளிய மக்களை கொரோனா என்னும் அரக்கனிடமிருந்து பாதுகாக்க மாவட்ட அளவில் கூடுதலான பரிசோதனை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் குறிப்பாக கிராம சுகாதார செவிலியர்கள், ஆய்வக நுட்பனர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கான காலிப் பணியிடங்களை நிரப்பி இந்நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். தற்போது உள்ள சூழலில் நோயை குணப்படுத்துவதைவிட தவிர்ப்பதே மேல் என்ற வழியையே அரசு கடைபிடிப்பதாக தெரிகிறது.

தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ளுதல், தனிமைப்படுத்துதல், ஒதுங்கி இருத்தல், 'விழித்திரு, விலகியிரு, வீட்டிலிரு' என்ற வாசகத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டு, நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு இவை அனைத்தும் மக்கள் மீதே திணிக்கப்படுகிறது. கோவிட்-19ஆல் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலை நீடித்தால் வரும் காலங்களில் கொரோனா பாதிப்பு அதிகரிக்கும் நிலை உள்ளது.

## மருந்துத்துறை பலப்படுத்தல்

கோவிட்-19 நோயை எதிர்கொள்ள தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள இந்திய சுகாதார அமைப்பு தயாராக இல்லை என்று தெரிகிறது. இந்த கோவிட்-19 வைரஸ் தொற்று பரவல் என்பது பொது சுகாதாரத் துறையின் மீது அக்கறை செலுத்தி அதனை

வலுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் ஊன்றுகோலாக இருக்க வேண்டும். தனியார்களை நம்பியிருக்காமல் மக்கள் நலனில் அக்கறை செலுத்தி அவர்கள் உயிரை பாதுகாக்கும் நல் அரசாக இருக்க வேண்டும். பொதுத்துறை மருந்து உற்பத்தித் துறையை பலப்படுத்தி அதில் மறு முதலீடு செய்வதற்கு இதுவே ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

**இந்தியா கற்க வேண்டிய பாடம்**

ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக நம்மை ஆண்ட பிரிட்டனில் சுகாதாரம் அரசின் கைகளில்தான் உள்ளது. கியூபா, வியட்நாம் போன்ற சின்னஞ்சிறிய சோசலிச நாடுகளிலும் இதுவே நிலை. ஆகையால்தான் அந்நாடுகளில் எல்லாம் இந்நோயின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனை பின்தொடர்ந்து இந்தியாவும் சுகாதாரத் துறையை தன் கையில் எடுக்கும்படி கொரோனா நோய் பாடம் கற்பித்து உள்ளது.

**சுகாதாரத் துறையே அடித்தளம்**

தமிழகத்தில் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான பரிசோதனைகளே நடத்தப்பட்டுள்ளதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை என்று சொல்லக்கூடிய ஐசிஎம்ஆர் நடத்திய ஆய்வறிக்கையில் தெரிய வந்தது. இதனைக் களைந்து நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும், பாதுகாப்புக்கும் சுகாதாரத் துறையே அடித்தளம் என்பதை உணர்ந்து இதனை வலுப்படுத்த அனைத்து வகையிலும் முயல வேண்டும். இத்தருணத்தில் நோயை எதிர்கொள்ளும் நிலையில் இந்திய நாடு தயாராக இருக்க வேண்டும். இதுவே ஆகப்பெரும் கடமை என எண்ணி செயல்பட வேண்டும்.

***நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்***

என்ற வள்ளுவ பெருமானின் வாக்கிற்கிணங்க நோய்க்கான காரணத்தை கண்டறிந்து அதனை களையச் செய்வதில் முக்கிய பங்காற்றும் அரசாக விளங்க வேண்டும் என்பதை இப்போதாவது உணர்ந்து அதனை நோக்கிய பயணத்தில் இந்திய அரசும், தமிழக அரசும் செயல்பட்டு மக்களை காக்கும் உன்னத பணியில் ஈடுபட வேண்டும்.

- **சி.பரமேஸ்வரி**

# மாவட்டங்கள் சார்பில் முறையீடுகள்

**விழுப்புரம்**

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை நிர்வாகப் பிரிவில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையை விழுப்புரம் மாவட்ட தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கத்தால் வலியுறுத்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்படாத நிலையில், அவர்களது அழைப்பை ஏற்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க விழுப்புரம் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்க நிர்வாகிகளோடு கல்லூரி முதல்வர் அவர்களை 12.06.2020 அன்று நேரில் சந்தித்து வலியுறுத்தியதை தொடர்ந்து விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரியும் அனைத்து பிரிவு நிர்வாக ஊழியர்கள் (தொழில் நுட்ப ஊழியர் அல்லாதோர்) அனைவருக்கும் சுழற்சி முறையில் பணி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

**வடசென்னை**

மாவட்டத்தில் கோவிட் 19 நோய் தொற்று தடுப்பு பணியில் ஈடுப்பட்டுள்ள அரசு ஊழியர்களுக்கான நிதி நிலுவை பட்டியல்களை IFHRMS காரணத்தால் திருப்பாமல் உடனடியாக பட்டியல்களை ஏற்று நேர்செய்ய கோரி நமது மாவட்டத்தின் சார்பில் சென்னை வடக்கு மற்றும் கிழக்கு அலுவலக சம்பளம் மற்றும் கணக்கு அலுவலரிடம் கோரிக்கை மனு மாவட்ட நிர்வாகிகளால் வழங்கி பேசப்பட்டது. இம் மாதம் பட்டியல்களை ஏற்பதாக தெரிவித்தனர்

வடசென்னை மாவட்டத்தில் கோவிட் 19 நோய் தொற்று ஏற்பட்ட அரசு ஊழியர்களுக்கு ரூபாய் 2 லட்சம் உடனடியாக வழங்க கோரி நமது மாவட்டத்தின் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக அலுவலரிடம் கோரிக்கை மனு மாவட்ட நிர்வாகிகள் வழங்கினார்கள்.

**தருமபுரி**

IFHRMS திட்டத்தை அடுத்த மாதம் அமல்படுத்தக்கூடாது வளர்ச்சித்துறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்வு வழங்க வேண்டும் அரசு ஊழியர்கள் அலுவலகங்களுக்கு சென்று வருவதற்கு ஏதுவாக ஏற்கனவே சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டவாறு தற்போதும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என தெரிவித்து மதிப்புக்குரிய தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இன்று கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

# தடுப்புக் காவல் மரணங்கள் தடுக்கத் தேவை சீர்திருத்தம்

அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணத்தில் ஜார்ஜ் பிளாய்டு என்ற கருப்பின இளைஞரை போலீஸ் அதிகாரி ஒருவர் கழுத்தில் மிதித்து கொன்றது அந்நாட்டில் மிகப்பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது போல், தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் வியாபாரி ஜெயராஜ் அவரின் மகன் பென்னிக்ஸ் ஆகியோர் நீதிமன்ற காவலில் அடுத்தடுத்து இறந்தது தமிழகம் முழுவதும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பத்திரிகை செய்தி மற்றும் தொலைக்காட்சி விவரங்களைப் பார்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தானாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளது.

குற்ற வழக்கிற்காகவோ விசாரணைக்காகவோ கைது செய்யப்பட்டவர்கள் போலீஸ் காவலிலோ, நீதிமன்ற காவலிலோ மரணம் அடைவது இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக தொடர்கிறது.

காவல் மரணங்களுக்கு போலீசாரின் கொடூர தாக்குதல்களே காரணம் என பல்வேறு நீதிமன்றங்கள் பலமுறை கண்டனம் தெரிவித்தும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. போலீசாரின் அத்துமீறல்கள் ஆக்ரோஷங்களால் நிகழும் இத்தகைய மரணங்கள் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள். இந்த மாதிரியான நிகழ்வுகள் சமுதாயத்திற்கு பெரிய இழுக்காகும்.

மாநில மற்றும் தேசிய மனித உரிமை கமிஷன்களுக்கு ஆண்டுதோறும் வரும் புகார்களில் 40%க்கும் மேற்பட்டவை போலீசாரின் அடக்குமுறை தொடர்பானவை. குறிப்பாக காவலில் இருப்பவர்கள் திடீர் மரணம் தொடர்பானவை என அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

போலீஸ் காவலில் நடக்கும் வன்முறைகளை தடுக்க உச்சநீதிமன்றமும் மனித உரிமை அமைப்புகளும் கடுமையான வழிகாட்டி குறிப்புகளை வெளியிட்டிருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் போலீஸ் உயர் அதிகாரிகள் அரசு நிர்வாகமும் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும்.

இந்நிலைமை மாறவேண்டும் எனில் போலீஸ் அத்துமீறல்கள் விஷயத்தில் சகிப்புத்தன்மைக்கே இடமில்லை என மத்திய உள்துறை அமைச்சர் சில நாட்களுக்கு முன் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து வந்து காவலில் நிகழும் ஒவ்வொரு மரணங்களுக்கும் அதற்கு காரணமான போலீசாரை பொறுப்பாக்கும் வகையில் போலீஸ் துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.



தற்போது சாத்தான்குளம் காவல்துறையினர் மீது கொலை வழக்கு பதியப்பட்டு இருக்கிறது. ஆனால் புதிய நூற்றாண்டில் காவல் மரணங்கள் நாம் எப்படி எதிர் கொண்டிருக்கிறோம் என்றால் கடந்த 2001க்கும் 2018க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியா முழுவதும் 1727 தடுப்பு காவல் மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றில் 810 வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 334 போலீஸ்காரர்கள் மீது மட்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பது. இவற்றில் 26 போலீஸ்காரர்கள் மட்டுமே தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், ஒரிசா தவிர ஏனைய மாநிலங்களில் போலீஸ்காரர்கள் தண்டிக்கப்பட்டதே இல்லை. இந்த காலகட்டத்தில் தமிழ்நாடு, குஜராத், மேற்கு வங்கம், ஆந்திரா பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட தடுப்புக் காவல் மரணங்கள் நிகழ்ந்திருந்தாலும் ஒரு போலீஸ்காரர்கூட தண்டிக்கப்படவில்லை.

மேற்சொன்ன விபரங்களை தொடர்ந்து தடுப்புக்காவல் மரணங்களைத் தவிர 2000க்கும் 2018க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் 2041 மனித உரிமை மீறல்களைக் காவல்துறையினர் செய்திருப்பதாக பதிவாகியிருக்கிறது. 733 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதில் 344 காவலர்கள் மட்டுமே தண்டிக்கப்பட்டனர். இது எல்லாமே தேசிய குற்றப்பதிவு ஆவண காப்பகம் அளித்துள்ள தரவுகள். தேசிய மனித உரிமை ஆணையம் அளிக்கும் தரவுகள் இன்னும் அதிர்ச்சியளிக்கின்றன. அந்த ஆணையத் தின் 2017-18ம் ஆண்டுக்கான அறிக்கையின்படி 2896 பேர் நீதிமன்ற காவலில் இறந்துள்ளார்கள். 250 பேர் காவல் நிலையத்தில் இறந்துள்ளார்கள். தமிழ்நாடு அரசு உயர்நீதிமன்றத்தில் அளித்த அறிக்கையின்படி 2012-16 ஆண்டுகளில் 157 பேர் மரணமடைந்திருக்கின்றனர். 2017 ஏப்ரல் முதல் 2018 மார்ச் வரை 11 பேர் காவல் நிலையத்திலும், 72 பேர் நீதிமன்றக் காவலிலும் இறந்திருப்பதாக தமிழக அரசு மனித உரிமை ஆணையத்திடம் அறிக்கை அளித்தது. ஆக காவல்துறை சீர்திருத்தமே அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவரும்.

- **ஏஎஸ்**

# தடியெடுத்தவர்களெல்லாம் தண்டல்காரர்கள் ஆகலாமா?

பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் என்கிற சட்டவிரோத அமைப்பு தமிழகம் முழுவதும் இயங்கிவருவதும், அந்த அமைப்பில் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் துணை அமைப்பான 'சேவா பாரதி' உறுப்பினர்கள் அதிகம் பேர் பங்கு வகிப்பதும், இவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் விசாரணைக் கைதிகளை அடித்துச் சித்திரவதை செய்வதும் வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றன... அதனால் பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் என்கிற அமைப்பையும், சேவா பாரதி என்கிற அமைப்பையும் மொத்தமாகத் தடைசெய்ய வேண்டும் என்னும் குரல் தமிழகம் முழுவதும் ஒலிக்கத் உள்ளது.

சாத்தான்குளம் காவல் நிலைய இரட்டைக் கொலை தொடர்புடைய காவல்துறை நண்பர்கள் (சேவா பாரதி) கணபதி, கண்ணன், ஜேக்கப், எலிசா ஆகிய நால்வரும் கைதுசெய்யப்பட வேண்டும், அனைவர் மேலும் கொலைவழக்குப் பதியப்படவேண்டும் என்பதும் அவசியமானது.

சாத்தான்குளம் படுகொலைக்குப் பிறகு வீரகேரளம்புதூர் காவல்நிலையத்தில் முருகேசன் என்கிற இளைஞர் அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டதும், காயல்பட்டினம், எட்டையபுரம், பேய்க்குளம் உள்ளிட்ட தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் மற்றும் தமிழகம் முழுவதும் பற்பல காவல்நிலையங்களில் சித்தரவதைகள், பாலியல் வன்கொடுமைகள், அடக்குமுறைகள் அடுக்கடுக்காக நடப்பது தெரியவருகிறது. காவல்துறை அத்துமீறல்களில் பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் எனும் பெயரில் உலாவரும் காவிக்கும்பல்களின் கைவரிசை இருந்திருக்கக் கூடும். எனவே இவ்வழக்குகளைப் புதுப்பித்து பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் கயவர்களையும் விசாரித்து தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும்.

பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் என்னும் அமைப்பை உருவாக்க மக்கள் நல அமைப்புகளோ அரசியல் கட்சிகளோ கோரிக்கை எதுவும் வைக்கவில்லை. இந்நிலையில் இந்தியா முழுவதும் பா.ஜ.க.வின் துணை அமைப்புகள் மத்திய மாநில அரசு அமைப்புகளில் ஊடுருவி வருவதன் ஒரு பகுதியாகவே சேவா பாரதி அமைப்பின் செயல்பாடுகளையும் பார்க்க வேண்டியுள்ளது.

வட மாநிலங்களில் பசுகுண்டர்களாக வலம் வருவதும் மாட்டுக்கறி வைத்திருந்தாலோ மாடுகளுடன் பயணித்தாலோ அடித்தே கொல்வதும் இத்தகைய பா.ஜ.க.வின் துணை அமைப்புகள் தான்.

காதலர் தினத்தில் நாடு முழுவதும் காதலர்களிடம் வலுக்கட்டாயமாக ராக்கி கயிறுகளைக் கொடுத்து கட்டிக்கொள்ள அராஜகம் புரிவதும் இத்தகைய காவிக் கூட்டம்தன்.

தலித் உள்ளிட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்களும் பிற வகுப்பைச் சேர்ந்த பெண்களும் காதல் வயப்படும் போது சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு இளைஞர்களையும் பெண்களையும் சித்திரவதை செய்தும் அவமானப்படுத்தியும் கொலைபாதகத்தையும் செய்யும் கூட்டம் இந்தக் காவிக் கூட்டம் தான்.

சமயம் கிடைக்கும் போதெல்லாம் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்பி சமூக வலைதளங்களில் மதவெறியூட்டி வன்முறை வெறியாட்டம் ஆடுவதும் இத்தகைய பா.ஜக.வின் துணை அமைப்புகள் தான்.

சனாதனத்திற்கும், மூட நம்பிக்கைகளுக்கும், பெண்ணடிமைத்திற்கும் என்றும் சிம்ம சொப்பனமாக விளங்கும் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர்களுக்குக் களங்கம் கற்பிக்கும் பதிவுகளை சமூக வலைதளங்களில் பதிவிடுவதும் அத்தகைய தலைவர்களின் சிலைகளைச் சேதப்படுத்துவதும் காவிகளின் வாடிக்கை.

மத்திய பா.ஜ.க. ஆட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு ஆர்.எஸ்.எஸ், விஸ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங்தள், இந்து மக்கள் கட்சி, சேவா பாரதி என பல பெயர்களைத் தாங்கி அரசு நிறுவனங்களில் ஊடுருவி மக்கள் விரோத செயல்களைச் செய்து வரும் காவிக் கூட்டத்தின் சங்கிலித் தொடரான ஒரு பணியே பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் எனும் குயுக்தி.

காவல்துறை மக்களின் நண்பர்கள் என எத்தனை முறை அரசு விளம்பரப்படுத்திலும் பரப்புரை மேற்கொண்டாலும் மக்கள் ஏற்கவும் நம்பவும் தயாரில்லை. ஏனெனில் காவல்துறையில் கறுப்பு ஆடுகளே கோலோச்சும் காலமிது. கண்முன் நிகழ்ந்து வரும் கொடூரப் படுகொலைகள், வன்முறைகள், பாலியல் அக்கிரமங்கள், போராட்டங்களில் ஏவப்படும் வன்முறை ஆகியவற்றுக்கும் காவல் துறையே உற்ற துணையாக உள்ளது வெள்ளிடை மலை. சாத்தான்குளம் ரேவதி போன்ற நேர்மையான காவலர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்பதே உண்மை நிலை. இவ்வாறிருக்க காவல்துறை கயவர்களுக்கு நண்பர்கள் எனின் அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதற்கு சாத்தான்குளம் இரட்டைக் கொலையே ரத்த சாட்சி.

எனவே சட்டவிரோத பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் எனும் அமைப்பை நாடு முழுவதும் கலைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். இக் கோரிக்கையை வலியுறுத்தி இயக்கம் காண வேண்டியதும் சேவா பாரதி அமைப்பைத் தடை செய்ய வலியுறுத்திப் போராட வேண்டியதும் மனித நேய விரும்பிகளின் மகத்தான கடமை.

- **பெரணமல்லூர் சேகரன்**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# 14.07.2020 மாவட்டங்களில் நடைபெற்ற பெருந்திரள் முறையீடு இயக்கம்



திருவாரூர்



திருப்பூர்




திருவள்ளூர்




தூத்துக்குடி



விருதுநகர்




மதுரை




திருச்சிராப்பள்ளி



கள்ளக்குறிச்சி

Registered Postal Registration No.TN/CH/(C)/200/2018-2020 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431-2020 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirka Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.07.2020

# 14.07.2020 மாவட்டங்களில் நடைபெற்ற பெருந்திரள் முறையீடு இயக்கம்



செங்கல்பட்டு



கடலூர்



தருமபுரி



காஞ்சிபுரம்



திண்டுக்கல்



கரூர்



கன்னியாகுமரி



கோவை



Registered Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai,Chennai-600002. Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com